Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 20 (28.07.2005) வியாழக்கிழமை இதழ்:301

# தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள படையினர் உடன் வெளியேறவேண்டும்!

## வவுனியா பேரொளர் மாநாட்டில் பிரகடனம்!

வவுனியா—

எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் படையினர் - எமது மண்ணை, கடலைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும், எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும். அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்டபடியே உள்ளனர் என்று வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ் உரிமைகளையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு - மரபு வழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் தமிழரின் இறைமைக்கான போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்தைக் கோருவதாக இந்த எழுச்சிப் பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தின் முழு விபரமும் வருமாறு -

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம், இன்று அடைந்துள்ள அவலமானதும், ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி - எமக்கான நியாயத்தையும், அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இலங்கைத் தீவில் ஐரோப்பியர் ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக (11 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தின் விடுதலைப் பிரகடனத்துக்கு முன்னோடியாக

# உணர்வுபூர்வமாக நடந்தேறிய தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு!

வவுனியா—

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறும் வகையில் - தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு வவுனியா - வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்த மாநாட்டில் தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் பொது அமைப்புக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், மதத்தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ மகளிர் (12 ஆம் பக்கம் பார்க்க)



## மாநாட்டைக் குழப்ப வவுனியாவில் குண்டுவெடிப்புக்கள்!



# மாநாட்டைக் குழப்ப வவுனியாவில் குண்டுவெடிப்புக்கள்!

வவுனியா—


தமிழீழ விடுதலைப் பிரகடன மாநாடு நேற்று வவுனியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அதனை குழப்பியடிக்கும் நோக்கில் இராணுவத்தினர் குண்டுவெடிப்புக்களை நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் வவுனியா பிரகடன மாநாடு அண்மித்த பகுதியில் முதல் குண்டு வெடித்தது. மாலை 5.45 மணிக்கு கிளைமோர் ரகக் குண்டு அதே இடம் அருகே வெடித்தது. மீண்டும் மாலை 6.15 மணிக்கு வவுனியா குருமன்காடு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அருகே மூன்றாவது குண்டு வெடித்தது.

மூன்று குண்டுவெடிப்புச் சம்பவங்களிலும் காயமடைந்தோர் மற்றும் சேதங்கள் குறித்த விவரங்கள் தெரியவில்லை.

தமிழர் மாநாட்டைச் சீர்குலைக்கும் வகையில் இராணுவம் நடத்திய இந்த குண்டுவெடிப்புகள் குறித்து மாநாட்டில் பங்கேற்ற அனைத்துப் பிரதேச தமிழினப் பிரதிநிதிகளும் கடும் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

# கே-8 ரக யுத்த விமானங்கள் கொழும்பை வந்தடைந்தன!



கொழும்பு—

சீன நாட்டிலிருந்து கே-8 தரத்திலான குண்டு வீச்சு விமானங்கள் நேற்று முன் தினமிரவு கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன.

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தை வந்தடைந்த 3 கே-8 ரக விமானங்களை இலங்கை அரசாங்கத்துக்குக் கையளிக்கும் வைபவம் கொழும்பு கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தில் நடைபெற்றது.

இதில் சீன நாட்டின் இலங்கைக்கான தூதுவர் சன்கொய்ங் விமானங்களை விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேராவிடம் கையளித்தார். இந்த விமானங்கள் 2001 ஆம் ஆண்டு முதன் முதலில் இலங்கையில் குண்டு வீசுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

கட்டுநாயக்க விமானத் தளத்தைத் தாக்கியதன் ஊடாக இந்த விமானங்கள் அழிக்கப்பட்டிருந்தன. தற்போது மீண்டும் இலங்கை விமானப்படையினரால் யுத்தத்துக்கு இவை பயன்படுத்தப்படவுள்ளன.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்

# ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த தெரிவு!



கொழும்பு—

சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள அதேவேளை - பிரதமர் வேட்பாளராக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் - இது தொடர்பான அறிவித்தல் இன்று ஊடக மாநாடு ஒன்றில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப் பட்டுள்ளது.

அத்துடன் - அந்தத் தீர்மானம் இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பரிந்துரைக்கு உட்படுத்தப்படும்.

இதனையடுத்தே இந்த பரிந்துரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிர்வாகக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்!

வவுனியா—

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழர் தேசிய எழுச்சி மாநாட்டில் பேராளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 14 ஆய்வுக்கட்டுரைகளும் வருமாறு -

✷ சிறிலங்கா அரசின் திட்டமிட்ட கல்விப் புறக்கணிப்பு, பா. நந்தகுமார் - முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி. யாழ். பல்கலைக்கழகம்.

✷ தமிழினப் படுகொலைகள் கணபதிப்பிள்ளை, அதிபர்.

✷ சிறிலங்கா அரசின் கடல் வலய ஆக்கிரமிப்பும் கடல் வளச் சிதைவும், சூரியகுமாரன், செயலாளர், கடற்தொழி லாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ். மாவட்டம்.

✷இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசம் (உயர் பாதுகாப்பு வலயம்), ச.விஜயரூபன், தலைவர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

✷திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், நிலப்பறிப்பும் கனக சபை தேவகடாட்சம், இலக்கிய எழுத்தாளர், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதிய ஸ்தாபகத் தலைவர், திருகோணமலை.

✷இடப்பெயர்வும், அவல வாழ்வும், சூ. பத்மநாதன், தேசிய எழுச்சிப் பேரவை, மன்னார்.

✷சிறிலங்கா அரசினால் தமிழர் தாயக விவசாயிகள் புறக்கணிப்பு, இ.கணேசபிள்ளை, (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வைத்தியம்

எந்த வைத்தியம் பார்த்தும் நோய் தீரவில்லையா? உங்கள் அனைத்து நோய்களுக்கும் மருந்துகள், சத்திரசிகிச்சைகள், ஊசி மருந்துகள் இல்லாமல் வலியின்றிய அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு, ஆலோசனைகள் அனைத்தும் இலவசம்.

**(Acu) Dr.R.P.Sankar, M.D.Phd.** ஷென்மென் அக்குபன்ச்சர் வைத்தியசாலை, தபால் பெட்டி சந்தி, பலாலி வீதி திருநெல்வேலி (திருநெல்வேலி இலங்கை வங்கி அருகில்) *(1995)*

### இடம் தேவை

வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் கல்வி நிறுவனத்துக்கு சிறிய அளவிலான அலுவலகம் அமைப்பதற்கு பிரதான வீதிகளில் அமைந்த இடம் தேவைப்படுகிறது. (Annex - விரும்பத்தக்கது) தொடர்புகளுக்கு:- 0777 280555 (பிற்பகல் 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்) *(C/4318)*

### பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் இயங்கும் வர்த்தக நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட பணியாளர்கள் இருபாலாரும் தேவை. பணிபுரிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்:- விளம்பர இலக்கம் - 40, நமது ஈழநாடு, இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

சிதம்பரேஸ்வரன் யோகநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 742284085V. 25-07-2005 கஸ்தூரியார் வீதிக்கும் கன்னாதிட்டி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுப்பவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். மற்றா தளபாட நிலையம் தொ.பேசி.இல. 0777245325, 395, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். *(C/4320)*

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்




பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

மகத்தான இரண்டாவது வெற்றி வாரம்

அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த



**சின்னா**

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

மாதவன், சதா மற்றும் பலர் நடித்த

**பிரியசகி**



காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ஷாம், லைலா நடித்த

**உள்ளம் கேட்குமே**

29 முதல் - இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

ஜெயம் ரவி நடித்த **தாஸ்**

காட்சிகள்:- 11.00, 3.00, 6.00 (பழைய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த

**சந்திரமுகி**

பஸ் போக்குவரத்துபாதை இல 782 - காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


# மருந்துக் கலவையாளர் பயிற்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் பிராந்தியப் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெற விருந்த மருந்துக் கலவையாளர் பயிற்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

பயிற்சி நடைபெறும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என - பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# தெரிந்த மொழிகளில் எழுதிய முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் முறையினைப் பின்பற்றவும்

## யாழ். பொலிஸாருக்கு மேலதிக நீதிவான் பணிப்பு

யாழ்பாணம்—

பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் முறைப்பாடு செய்வதற்கு வருகின்ற வேளைகளில், அவர்களின் முறைப்பாட்டை அவர்களுக்கு தெரிந்த மொழிகளில் எழுதி கையொப்பமிட்டு முறைப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையை அமுல்படுத்துமாறு - யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதிநந்தசேகரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது யாழ். குடாநாட்டில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் குறைவாக இருக்கின்றனர். இதனால் சில பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி தெரியாத பொலிஸாரிடம் முறைப்பாட்டைச் செய்கின்ற வேளைகளில் - பொதுமக்கள் செய்கின்ற முறைப்பாடு ஒன்றாகவும், பொலிஸார் பதிவு செய்கின்ற முறைப்பாடு இன்னொன்றாகவும் இருக்கின்றது.

மொழி பெயர்ப்பு மற்றும் பதிவு செய்யும் பொலிஸார் தாம் புரிந்துகொள்கின்ற முறைகளில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதால், முறைப்பாடு செய்யும் மக்கள் தமக்குரிய தீர்வை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே, முறைப்பாடு செய்ய வருகின்ற மக்கள் அவர்களின் முறைப்பாட்டை, அவர்களுக்கு தெரிந்த மொழிகளில் எழுதிக் கையொப்பமிட்ட பின்னர் அந்த முறைப்பாட்டிற்குரிய நடவடிக்கையை எடுப்பதன் மூலம் முறைப்பாட்டுக்கான தீர்ப்பை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், அந்த நடைமுறையை உடன் பின்பற்றுமாறும் உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

முறைப்பாடு செய்ததற்கான படிவங்களை ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், முறைப்பாட்டின் மூலப் பிரதியை முதல் தகவல் புத்தகத்தில் சேர்த்து தமது விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்—

இதுவரை காலமும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விகற்று வெளியேறிய அனைத்து கற்கைநெறி மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒன்றுகூடுமாறு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்கச் செயலாளர் வீ.தயாபரன் கேட்டுக்கொள்கிறார்.

வெளியேறிய மாணவர்களது பட்டமளிப்பு மற்றும் முக்கிய விடயங்கள் பற்றி இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க தென்மராட்சியில் இராணுவம் தடை

தென்மராட்சி—

தென்மராட்சி தெற்கு, மறவன்புலவு, கைதடி - நாவற்குழி, கோவிலாக்கண்டி பகுதியிலுள்ள கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கவேண்டாமென அந்தப் பகுதி இராணுவ அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் மீளக் குடியேறியுள்ள - முன்பு மாடுகளை வளர்க்காத பலரும், நுணாவில்-கொல்லங்கிராய்ப் பகுதியிலுள்ள சிலரும் கட்டாக்காலி மாடுகளைப் பெருமளவில் பிடித்து கோவிலாக்கண்டி ஊடாகவும், நுணாவில் தெற்கு ஐயனார் கோவில் பகுதியூடாகவும் கடத்தி விற்றுவருகின்றனர்.

தனங்களப்பு, மறவன்புலவு பகுதியில் இதுவரை மீளக்குடியேற அனுமதிக்கப்படாத சுமார் ஐந்நூறு குடும்பங்களில் நூற்றுக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் கால் நடைகளே கட்டாக்காலிகளாக இந்தப் பகுதியில் திரிந்து வருவதாகவும், அவர்கள் மீளக்குடியேறும் வரை கால்நடைகள் அந்தப் பகுதியில் நிற்பதற்கு அனுமதிக்கும்படியும் கோரி, எவரும் அவற்றைப் பிடிக்க அனுமதிக்க வேண்டாமெனவும் மறவன்புலவு விவசாய சம்மேளனத் தலைவர் அந்தப் பகுதி இராணுவ அதிகாரி, பிரதேச செயலர், அரச அதிபர், கமநல ஆணையாளர் ஆகியோரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்தே இந்தத் தடையுத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமை இல்லாமல் இதுவரை கால்நடைகளைப் பிடித்து வைத்துள்ளோரினதும், கடத்தி விற்றோரினதும் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கெதிராக் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் விவசாய சம்மேளனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (29)

# ஒன்றுகூடலும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம்—

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சங்கத் தலைவர் வே. வேதாபரணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ். பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் இராசதுரை, யாழ். பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தலைவர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


**இலங்கைச் செஞ்சிலுசைவச்சங்கம் - யாழ்.கிளை**

## சாரதிகளுக்கான வெற்றிடம்

எமது கிளைக்கு சாரதிகள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ள சாரதிகள் தமது சுய விபரத்துடன் 03.08.2005 இற்கு முன்னதாக கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். சாரதிகள் - லொறிகள் ஏனைய வாகனங்களும் ஓட்டக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/4315)

## SRI LANKA RED CROSS SOCIETY
## JAFFNA DISTRICT
### in conjunction with the Australian Red Cross

### VACANCY FOR COMMUNITY DEVELOPMENT OFFICER

We are seeking a motivated person with qualifications demonstrated experience in the area of Community Development to work with the Construction Delegate of the Australian Red Cross on the current Tsunami Reconstruction Housing Program phase 3. The position will involve regular travel to 4 communities in the Vadamarachy East Division and the successful applicant will be required to stay in Kilinochchi on a regular basis.

**Duties applicable:**

1. Work towards the achievement of Sri Lankan Red cross (SLRCE) and Australian Red cross (ARC) goals through effective relations and teamwork.
2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and account abilities.
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Participate in and represent SLRCS's and ARC's interests at regular district level coordination meetings.
2. Liaise with District authorities (GA and PDS) and I/NGO's regularly.
3. Build relationships with SLRCS volunteer groups and beneficiary communities.
4. Assist SLRCS and ARC in the ongoing process of involving communities in participating with the rebuilding process.
5. Liaise closely with key members of the beneficiary communities, including Village Development Forum Leaders.
6. Work with ARC Construction Delegate to undertake extensive community consultations and address the social needs of the community.
7. Assist SLRCS, ARC, contractors and communities to overcome issues in a cooperative and sensitive manner.
8. Provide accurate translation to and from Tamil and English when required both orally and in written form.

Applications should accompany testimonials, bio-data and references from previous employers.


**Applications should be sent under registered mail on or before 14th August 2005 to:**

**Branch Executive Officer,
Sri Lanka Red Cross Society,
Jaffna District Branch,
No: 73, Kandy Road, Jaffna.**

(C/4316)

# மக்களுடைய துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்கு புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது அவசியம்

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு —

யுத்தம் மற்றும் சுனாமி அழிவுகளைச் சந்தித்த வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கியுள்ள துன்ப, துயரங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் எனவும், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரங்களைக் கொண்ட பிராந்தியக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு இனியும் தாமதம் காட்டக்கூடாது எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சுனாமி அழிவுகளில் 70 சதவீதமானவை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டன. வடமாகாணத்தில் சுமார் 4 ஆயிரத்து 762 பேரும், கிழக்கு மாகாணத்தில் சுமார் 6 ஆயிரத்து 153 பேருமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக சுமார் 10 ஆயிரத்து 915 தமிழ் மக்கள் சுனாமியால் உயிரிழந்தனர்.

யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். யுத்தநிறுத்தம் வந்து சுமார் நான்கு ஆண்டுகளாகியும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தொடர்ந்தும் தங்கி வருகின்றனர் எனத் தெரிவித்த அவர் -

மத்தியிலிருந்து எடுக்கப்படும் முடிவுகளால் யுத்தம், சுனாமி ஆகியவற்றால் அழிந்துபோன வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் புனரமைப்புச் செய்யவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவோ முடியாது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அனைத்துலக சமூகமும் தயாராக இருக்கிறது. ஆனால் அந்த உதவிகளை சரியான முறையில் பகிர்ந்தளிக்கக்கூடிய கட்டமைப்புக் கிடையாது. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் - பிராந்தியக் கட்டமைப்பு உரிய அதிகாரங்களுடன் காலதாமதமின்றி அமைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சுனாமி ஏற்பட்டு 7 மாதங்கள் கழிந்த பின்னரும் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் இயல்புநிலை திரும்புவது பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சுனாமியால் முஸ்லிம் மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த சம்பந்தன் -திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளுக்குப் பலியானவர்களில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் உரிய உதவிகள் கிடைப்பது உறுதி செய்யப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (01)

# கல்கமுவ வாவியிலிருந்து ரவைகள் கண்டெடுப்பு!

கொழும்பு —

கல்கமுவ - கொப்ராகமுவ வாவியிலிருந்து துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த வாவியில் சோதனை நடத்தப்பட்டபோது அலுமினியப் பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து 253 ரி - 56 ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இராணுவ முகாமிலிருந்து இந்த ரவைகள் திருடப்பட்டு இங்கு கொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, கலேவெல தேவஹீவ நீர்த்தேக்கத்திலிருந்தும் 3 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நீர்த்தேக்கத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு கிடைத்த பொலித்தீன் பை ஒன்றில் இந்த 3 குண்டுகளும் இருந்துள்ளன. குண்டுகளில் கிறிஸ் தடவப்பட்டு அவை பொலித்தீன் பை ஒன்றினுள் போடப்பட்டிருந்தன. குண்டுகளைக் கைப்பற்றிய பொலிஸார் அவற்றை செயலிழக்கச் செய்தனர்.

இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

## ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்த

# அறிவூட்டல் செயற்பாடுகளை ஐ.தே.கட்சி ஆரம்பிக்கவுள்ளது

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அதன் அனைத்து கிளைக் காரியாலயங்களுக்கும் அறிவூட்டவுள்ளது.

எதிர்வரும் 29, 30, 31 ஆம் திகதிகளில் இந்த அறிவூட்டல் நடவடிக்கைகள் இடம்பெறும். அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் வகையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்த ஆண்டிற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி - அடுத்த மாதம் முழுவதும் நாடாளாவிய ரீதியில் பல செயற்திட்டங்களை முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.


ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்துமாறு வலியுறுத்தி மக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கைகளை நாடு பூராகவும் பல கட்டங்களில் மேற்கொள்வதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

இது தவிர, ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டிய காலம் சம்பந்தமாக மக்களுக்கு அறிவூட்டும் வகையில் பிரதேச மட்டத்தில் 5000 கூட்டங்களை நடத்தவும், பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

# ஜாதிக ஹெல உறுமயக் கட்சியுடன் தேசிய பிக்குகள் முன்னணி இணையாது

## அமில தேரர் தெரிவிப்பு



கொழும்பு —

ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து செயற்படமாட்டோம் என தேசிய பிக்குகள் முன்னணி அறிவித்துள்ளது.

கொழும்பில் தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த அமில தேரர் ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியதாவது -

ஜாதிக ஹெல உறுமய மற்றும் எமது செயற்பாடுகளின் நோக்கங்கள் ஒன்றாக இருந்தாலும், நாங்கள் இணைந்து செயற்படமுடியாது.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதாகச் சொல்லுகின்ற ஹெல உறுமய, நாடாளுமன்றத்தில் அதற்கெதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டபோது, அவர்கள் பங்கேற்கவில்லை.

அவர்களது நடவடிக்கைகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. உண்மையாக தேசப்பற்றுள்ள சக்திகளோடு இணைந்து செயற்படவே நாங்கள் விரும்புகிறோம். ஆனால், ஹெல உறுமய போலியான அரசியலை நடத்தி வருகிறது.

அவர்களது செயற்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக உள்ளது எனத் தெரிவித்தார்.

# மஹிந்த, மைத்திரிபால ஆதரவுடனேயே றெஜினோல்ட் குரேயை எதிர்க்கிறேன்!

## நந்தன மெண்டிஸ் கூறுகிறார்

கொழும்பு —

மேல்மாகாண சபையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதல்வராகப் பொறுப்பேற்ற றெஜினோல்ட் குரேயை சுதந்திரக் கட்சியின் முன்னாள் முதல்வர் நந்தன மெண்டிஸ் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரது ஆதரவுடன்தான் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் முதல்வர் நந்தன மெண்டிஸ் தெரிவித்தார்.

இதனிடையே சுதந்திரக் கட்சியின் மெண்டிஸ் தலைமையிலான அதிருப்தியாளர் அணியுடன் இணைந்து செயற்படுவதில் ஜே.வி.பி தீவிரம் காட்டிவருகிறது. அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களையும் தமது அணியில் இணைத்துக்கொள்வதில் ஜே.வி.பி முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. (01)

# தனியார் ஊடகங்களால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

கொழும்பு —

இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக தனியார் ஊடகங்கள் செயற்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முப்படை அதிகாரிகள் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனியார் ஊடகங்களில் குறிப்பாக இராணுவ ஆய்வாளர்கள் பலர் இராணுவம் குறித்த தரவுகளை வெளியிடுகின்றனர். இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனவும் அவர் கூறியுள்ளார். (01)

## ஜனாதிபதியின் பிடிவாதம் காரணமாகவே

# முஸ்லிம்களுக்கெதிரான உள்ளடக்கம் பொதுக்கட்டமைப்பில் இடம்பெற்றது!

## ஹசன் அலி தெரிவிப்பு

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் நலன்களுக்கு எதிரான சில உள்ளடக்கங்களை தாம் இரண்டு தடவைகள் நிராகரித்த போதும், ஜனாதிபதி சந்திரிகாவின் பிடிவாதத்தின் காரணமாக அந்த உள்ளடக்கங்கள் பொதுக்கட்டமைப்பில் இடம்பெற்றுவிட்டதாக - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரசின் செயலர் ஹசன் அலி தெரிவித்தார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்த இந்தத் தகவலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தம்மிடம் தெரிவித்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலர் ஹசன் அலி குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய மாநாட்டைக் கூட்டுவது தொடர்பாக கண்டியிலிருந்து வந்த குழுவினரிடம் இந்தத் தகவலை ஹசன் அலி தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புக்கான நிர்வாக நகராக திருகோணமலையை விடுதலைப் புலிகள் பரிந்துரைத்தபோதும், கிளிநொச்சியை நிர்வாக நகராக மாற்றுவதற்கு அரசாங்கமே முனைப்புடன் செயற்பட்டதாக நோர்வேயின் உதவித் தூதுவரும் தம்மிடம் தெரிவித்ததாக ஹசன் அலி குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பின் உயர் பீடத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தும், அரசாங்கத்திலிருந்தும் மொத்தம் இரண்டு பேரை மாத்திரம் நியமிக்கவேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொண்டபோதும் முஸ்லிம் பிரதிநிதி உள்ளடங்கும் வகையில் - தாமே அதனை மூன்று உறுப்பினர்களாக மாற்றுவதற்கு ஆலோசனை தெரிவித்ததாகவும் சு.ப. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளதாக ஹசன் அலி தெரிவித்தார். (தே)

# மேர்வின் சில்வாவின் மகன் விடுதலை; போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் விசனம்

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரைத் தாக்கியதாகக் கைது செய்யப்பட்ட பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மகன் மாலக சில்வா விடுதலை செய்யப்பட்டது குறித்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் விசனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் மா அதிபர், ஊடகவியலாளர்கள் மத்தியில் வெளியிட்ட செய்தி குறித்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

மேர்வின் சில்வா மகன் தொடர்பான சம்பவத்துக்கு உரிய ஆதாரம் எதுவும் இல்லை என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதுமான ஆதாரங்கள் இல்லாததாலேயே மாலக சில்வாவை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் விடுதலை செய்ததாகவும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

பொலிஸாரின் இந்தச் செயற்பாடுகளுக்கு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

ஊடகத்துறையினரை இழிவாகப் பேசியதற்காக ஊடகங்களால் அமைச்சர் மேர்வின் சில்வா கடும் கண்டனத்துக்குள்ளாகியுள்ள நிலையில் - பொலிஸார் இந்த வழக்கில் மென்மைப்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் சாடியுள்ளனர். (01)

# இலங்கை லெவன் பயிற்சி ஆட்டம்; இந்திய அணி 61 ஓட்டங்களால் வெற்றி

கொழும்பு—

முத்தரப்பு போட்டியில் விளையாடுவதற்காக கொழும்பு வந்துள்ள இந்திய அணி நேற்று முன்தினம் இலங்கை கிரிக்கெட் லெவன் அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் மோதியது.

50 ஓவர் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 8 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களை எடுத்தது.

விக்கெட் காப்பாளர் மகேந்திரசிங் டோனி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார். அவர் 81 பந்தில் 86 ஓட்டங்களைச் சேர்த்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அதில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கியிருந்தன.

தொடக்க வீரராக இறங்கிய லக்ஸ்மண் 19 ஓட்டங்களிலும், ஷேவாக் 15 ஓட்டங்களுடனும் வெளியேறினர். யுவராஜ் சிங் 24, ராவிட் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். கைப் 52, யாதவ் 17 ஓட்டங்களை எடுத்தனர்.

அடுத்துக் களமிறங்கிய இலங்கை லெவன் அணி 47 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களை எடுத்து தோல்வியுற்றது. இதனால் இந்தியா 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இலங்கை அணியில் அதிகபட்சமாக பிரசன்ன ஜெயவர்த்தன 66 ஓட்டங்களை எடுத்தார்.

இந்திய பந்துவீச்சாளர்களில் பதானின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது. அவர் 4 விக்கெட்டையும், யாதவ் 2, நெஹ்ரா, பாலாஜி, ஷேவாக், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். கும்ளேக்கு விக்கெட் எதுவும் கிடைக்கவில்லை.

## தங்கம் வென்ற சிம்பாப்வே வீராங்கனை



கனடாவில் உள்ள மன்ட்ரியல் நகரில் நடந்துவரும் உலக நீச்சல் போட்டி- பேக் ஸ்டிரோக் 100 மீற்றர் பிரிவில் சிம்பாப்வே வீரர்களை கிறிஸ்டி கோவன்டிரி (மத்தியில் இருப்பவர்) தங்கப்பதக்கம் வென்றார். ஜேர்மனி வீராங்கனை புஜஸ்டல் (இடது புறம்) வெள்ளிப்பதக்கமும், அமெரிக்க வீராங்கனை நாதலி (வலது புறம்) வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

## பீலே தலைமையில் நடைபெறவிருந்த சுனாமி நல உதைபந்தாட்டம்: காலவரையறையின்றி ஒத்திவைப்பு

பாங்கொக்—

தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர் பீலே தலைமையில் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த சுனாமி நலநிதி உதைபந்தாட்டப்போட்டி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பீலேயின் (வயது 64) குடும்பப் பிரச்சினையே இதற்குக் காரணம் எனத் தெரிகிறது.

உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடிய நட்சத்திர வீரர்கள் பீலே தலைமையில் ஓர் அணியாகவும், தாய் சர்வதேச அணி இன்னொரு அணியாகவும் இந்தப் போட்டியில் மோதவிருந்தன.

இந்த நிலையில் போட்டி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தாய்லாந்து சிரேஷ்ட கால்பந்து சங்கத் தலைவர் தெபிடக் சான்சுதெப் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

பீலேயின் மகன் எட்சன், போதைமருந்து கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனால் பீலே குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக பீலே போட்டியில் பங்கேற்கும் நிலையில் இல்லை. அவர் தயாரானவுடன் போட்டி நடைபெறும் எனத் தெரிவித்தார்.

# விளையாட்டு

## ராவிட்டின் கடுமையான உழைப்பே கப்டன் பதவி பெறக் காரணம்!

### கங்கூலி தெரிவிப்பு



கொல்கத்தா—

இந்திய கிரிக்கெட் வீரர் கங்கூலி இங்கிலாந்தில் தங்கியிருந்து கவுண்டி கிரிக்கெட் போட்டியில் விளையாடி வந்தார். அவருக்கு 6 ஒருநாள் போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டிருந்ததால் இங்கிலாந்தில் நடக்கும் 3 ஒருநாள் போட்டிகளில் அவர் பங்கேற்றார்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபை கங்கூலி தடை மீது மேன்முறையீடு செய்தது. அது சம்பந்தமாக இன்று லண்டனில் விசாரணை நடக்கிறது. எனவே கங்கூலி அங்கேயே தங்கி இருப்பார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால், அவர் நேற்றுக் காலை கொல்கத்தா திரும்பிவிட்டார். விமான நிலையத்தில் அவரை நிருபர்கள் சந்தித்து பேட்டி கண்டனர். லண்டனில் விசாரணை நடக்கும் இந்த நேரத்தில் நீங்கள் அங்கிருந்து வந்துவிட்டீர்கள் ஏன்? என்று நிருபர்கள் கேட்டதற்கு இதற்கு நான் என்ன பதில் சொல்லவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். இது சம்பந்தமாக நான் எந்தப் பதிலும் சொல்லப் போவதில்லை என்று கூறினார்.

ராவிட்டைக் கப்டனாக நியமித்திருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன? என்ற கேள்விக்கு - அவர் கடுமையாக உழைத்ததால் முறைப்படி இந்திய அணி கப்டனாக இருக்கிறார். இதில் நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்றார்.

மேலும் அவர் கூறும்போது- கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடியபோது அதுஎனக்கு சிறந்த அனுபவத்தை பெற்றுத் தந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## வடமராட்சி உதைபந்தாட்டம்; டைமன்ஸ் அரையிறுதிக்கு தகுதி

வடமராட்சி—

வடமராட்சி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 9 பேர்கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் டைமன்ஸ் அணி அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் டைமன்ஸ் அணியை எதிர்த்து றோயல் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் 11 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை றோயல் அணியினர் கோலாக்கத் தவறியமையே அவர்களின் தோல்விக்கும் காரணமாக அமைந்தது.

11 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் கோல் காப்பாளர் பந்தைப் பிடிப்பதற்கு கோல் பிரதேசத்தை விட்டு முன்னே சென்றபோது அவரைக் கடந்து வந்த பந்தை றோயல் அணி வீரர்கள் மூவர் அடிக்க முற்பட்டபோது டைமன்ஸ் அணி வீரன் அனுராகாந்தன் மிகச் சிறப்பாக அதனைத் தடுத்தார்.

இதில் முதல் பந்து நெஞ்சில் பட்டுத் திரும்பி றோயல் அணியிடம் சென்றபோது, மீண்டும் பந்தை உதைக்க அதனை மீண்டும் கால்களால் தடுத்து, அடுத்த பந்தை றோயல் அணியினர் வெளியில் அடித்தனர். இதனால் டைமன்ஸ் அணியின் வெற்றிக்கு அனுராகாந்தன் மிகமுக்கிய பங்காற்றினார்.

அதைத் தொடர்ந்து ஆட்டம் மிக விறுவிறுப்படைந்து 14 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணி வீரர் பிறேம்குமார் மிக நேர்த்தியான கோல் ஒன்றைப் போட்டார். இதனால் முதல் பாதியாட்டத்துக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் டைமன்ஸ் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது- றோயல் அணிவீரர் தர்மகுலநாதன் (வெள்ளை) மிகவும் கஷ்டப்பட்டு பல்வேறுபட்ட கோணங்களிலும் பந்தை அனுப்பியபோதும், டைமன்ஸ் கோல் காப்பாளர் மிகச்சிறப்பாகத் தடுத்தாடினார்.

இதனால் இடை வேளையின் பின்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் போடமுடியவில்லை.

இதனால், டைமன்ஸ் அணி றோயல் அணியை 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது. (12)



சர்வதேச சம்மேளனம் நடத்தும் உலக நீச்சல் போட்டி கனடாவில் உள்ள மன்ட்ரீல் நகரில் நடைபெற்று வருகிறது. மகளிருக்கான 100மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் அரையிறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் ஒரு நிமிடம் 6.20 வினாடிகளில் இலக்கை எட்டி உலகசாதனை படைத்த மகிழ்ச்சியில் அமெரிக்க வீராங்கனை ஜெஸிகா ஹார்டி (இடது) 50மீற்றர் பட்டர்ஃபிளை போட்டியில் உலக சாதனையுடன் தான் கைப்பற்றிய தங்கப் பதக்கத்தைக் கடித்து ஆனந்தத்தை வெளிப்படுத்துகிறார் தென்னாபிரிக்காவின் ஸ்கோமேன்.

## உடல்நிலை ஒத்துழைக்கும்வரை போட்டிகளில் பங்கேற்பேன்!

### ஆந்ரே அகாஷி தெரிவிப்பு

வொஷிங்ரன்—

எனது உடல்நிலை நன்றாக இருக்கும்வரை போட்டியில் தொடர்ந்து பங்கேற்பேன் என்று அமெரிக்க ரெனிஸ் வீரர் ஆந்ரே அகாஷி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் போட்டியில் முதற்சுற்று ஆட்டத்திலேயே காயமடைந்து தோல்வியுடன் வெளியேறினார் அகாஷி. அதன் பின்னர் அவர் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விம்பிள்டன் போட்டியிலும் விளையாடவில்லை. டொக்டர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2 மாதங்களாக ஓய்வெடுத்து வருகிறார் அவர். இதனால் ரெனிஸிலிருந்து விலகிவிட்டார் எனப் பரவலாக பேசப்பட்டது.

அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரெனிஸ் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்கப் போவதாக அகாஷி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: -

கடந்த 2 மாதங்களாக எனது நிலைமை மலை உச்சியில் பிரேக் இல்லாத காரில் செல்வது போல இருந்தது. ஒன்று, முன்னால் செல்லவேண்டும். அல்லது பின்னால் செல்லவேண்டும். வீட்டிலிருந்தபடி தொலைக்காட்சியில் ரெனிஸ் போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது நான் பின்னோக்கிச் செல்வது போல உணர்ந்தேன். ஆரோக்கியத்துடன் விளையாடுவதையே விரும்புகிறேன். எனது உடல் நிலை அனுமதிக்கும்வரை போட்டியில் பங்கேற்பேன்.

ஏற்கனவே லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த சில போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளேன். அதுபோல் இந்த வாரம் நடைபெறவுள்ள போட்டிகளிலும் வெற்றிபெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.

## கிளாசிக் ரெனிஸ் போட்டியில் சானியா முதல் சுற்றில் வெற்றி



ஸ்டன்போர்ட்—

அமெரிக்காவில் உள்ள ஸ்டன்போர்ட் நகரில் பெண்களுக்கான கிளாசிக் ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது. இதன் தொடக்கப் போட்டிகள் கடந்த திங்கள் தொடங்கின.

2 ஆவது நாளான நேற்று முன்தினம் இந்திய வீராங்கனை சானியா மிர்சாவும், கிரிஸ் நாட்டு வீராங்கனை எலீனி டேனிலிடுவும் மோதினார்கள்.

இதில் சானியா மிர்சா 7-6(4),2-6,6-3 என்ற செட்டில் எலீனியைத் தோற்கடித்தார். எலீனி உலக தரவரிசையில் 58 ஆவது இடத்தில் உள்ளார். சானியா 64 ஆவது இடத்தில் இருக்கிறார்.

எனவே சானியா வெற்றி பெறுவது கஷ்டமே என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சானியா அபாரமாக ஆடி வெற்றிபெற்றார்.

முதல் சுற்றின் மற்றொரு போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த மெகான், ரஷிய வீராங்கனை வீரா ஷ்னேராவை தோற்கடித்தார். இன்னொரு போட்டியில் இத்தாலி வீராங்கனை பிரான்சிஸ்கா, ரஷ்ய வீராங்கனை அலினாவைத் தோற்கடித்தார்.

# கட்டுப்பாடான உணவு, தேகப்பயிற்சியூடாக நீரிழிவு நோயினைக் கட்டுப்படுத்தலாம்!

## வைத்திய கலாநிதி இ.நித்தியானந்தம்

சங்கானை—

நீரிழிவுநோயைக் கட்டுப்படுத்தினால் நீடூழி வாழலாம். கட்டுப்பாடான உணவு, தேகப்பயிற்சி போன்றவற்றைச் சரியான முறையில் நாம் கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு நோய் வராமல் தடுக்கலாம். அல்லது இந்த நோய் வருவதைப் பிற்போடலாம்.

2010 ஆம் ஆண்டிலே யாழ். மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு ஐந்து பேருக்கும் ஒருவர் இந்த நோயால் பாதிக்கப்படுவார்கள் என சுகாதார வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நோய் வந்தபின் காப்பதைவிட, வருமுன் காப்பது சிறந்தது என இங்கிலாந்து ரத்தினம் பவுண்டேசன் வைத்திய கலாநிதி இ.நித்தியானந்தம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்ட நீரிழிவு நிலையத்தின் அனுசரணையாளராகக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர்ச்சூழலால் நிர்மூலமாக்கப்பட்டு, செயலிழந்து நின்ற இந்த வைத்தியசாலையை நல்லமுறையில் செயற்படவைக்க வேண்டும். இதன் மூலம் வைத்திய சேவையை விரிவுபடுத்தி, எமது மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்துக்காக இங்கு வைத்தியசேவைகள், ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தற்போது 55 உள்ளக நோயாளர்களை விடுதியில் வைத்து சிகிச்சை அளிக்கக்கூடிய வசதிகளைப் பெற்றுள்ளது. வெளிநாட்டு நிறுவனங்கள் பல விதமான உதவிகளைச் செய்து வருகின்றன. மகப்பேற்று சிகிச்சைக்காக விலையுயர்ந்த நவீன மருத்துவ உபகரணங்களை இந்த நிறுவனங்கள் தந்துள்ளன என மேலும் தனதுரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இங்கிலாந்து ரத்தினம் பவுண்டேசனைச் சேர்ந்த சர்வானந்தம் உரையாற்றுகையில் -

யாழ்ப்பாண மக்களுக்கென இருக்கும் ஒரே ஒரு அரச வைத்தியசாலையைச் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அங்கு படுக்கையில் ஒரு நோயாளி, படுக்கைக்குக்கீழ் ஒரு நோயாளி, விராந்தாவில் ஒரு நோயாளி என ஒவ்வொரு நோயாளியும் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் சிகிச்சை பெற்று வருவதை அவதானித்தேன்.

ஏன் இந்த நிலை? இதனை என்னால் தாங்க முடியாதிருந்தது. இந்த நிலை மாறவேண்டுமானால், இங்குள்ள இவ்வாறான வைத்தியசாலைகளை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம்.

ஒவ்வொருவரும் சுயநலத்தைப் பொதுநலமாக்கி, எமது நாடும், மக்களும் முன்னேற வேண்டுமென ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எந்த நிறுவனத்துக்கும் ஒரு பொற்காலம் உண்டு. அன்று ஆரம்பகாலத்தில் நன்றாக சேவையாற்றிய இந்த வைத்தியசாலையைப் படிப்படியாக மீண்டும் அதேநிலைக்கு கொண்டுவரச் செய்தல் வேண்டும். நோக்கம் உன்னதமாக இருக்கவேண்டும். அதை அடையச்செய்யும் வழியும் உன்னதமாக இருக்க வேண்டும்.

தன்னலம், ஆணவம், செருக்கு இல்லாமல், உன்னத நோக்குடன் செயற்பட்டால் வைத்தியசாலையை முன்னேற்றலாம். யாழ். வைத்தியசாலையிலும் இடநெருக்கடி குறையும். நோயாளர்களும் எந்த வித சிரமுமின்றி சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (48)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கு அம்பன், மணற்காட்டுப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால், அவற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உடலுக்கு மிக மோசமான தீங்கை விளைவிக்கும் இந்தக் கசிப்பு போன்ற திராவகங்கள் - மோசமான கழிவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுவதாகவும், இந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் போல் அமைத்து பலர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (14)

## கூட்டுறவு மாநாடு

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் கூட்டுறவு மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை பெரியளவில் நடத்துவதற்கு ஏற்பாடு!

உடுவில்—

83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மிகப்பெரியளவில் கொண்டாடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து, யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மேற்கொண்டு வருகிறது.

இந்த விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னதாக மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்றலிலிருந்து பணியாளர்கள், பணிப்பாளர்கள் அத்துடன் அலங்கரிக்கப்பட்ட கூட்டுறவாளர் ஊர்திகள் ஆகியவற்றின் ஊர்வலம் ஆரம்பமாகி, உடுவில் வீதி வழியாக நிகழ்வுகள் நடைபெறும் இடத்தை சென்றடையும்.

அங்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இளங்கோவனும், கௌரவ விருந்தினராக தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் சி.விஜிதரனும், சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கனகசபாபதியும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கமும், சி.ஐயாத்துரை, இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கூட்டுறவுச்சபையால் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சும், கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, நாடகப்போட்டி, வினாடிவினா போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (101,44)

## வலி. தென்மேற்கில் வீடுகள் அமைக்க உலக வங்கியால் நிதி வழங்கல்!

சுதுமலை—

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில், உலக வங்கி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 75 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 85 வீடுகள் அமைக்கப்படவிருந்த போதிலும், 75 வீடுகளுக்கே முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

சில்லாலை வடக்கில் 20 வீடுகள், சில்லாலை தெற்கில் 11 வீடுகள், மாதகல் கிழக்கில் 12 வீடுகள், மாதகல் மேற்கில் 14 வீடுகள், சண்டிலிப்பாய் வடக்கில் 11 வீடுகள் மற்றும் மாரீசன்கூடலில் 17 வீடுகளுமாக - 85 வீடுகளில் 75 வீடுகளுக்கான நிதியே வழங்கப்பட்டுள்ளது.

வீடுகளை அமைப்பதற்கு ஒரு பயனாளிக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும், முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த வேலைகளைப் பொறுத்தே மிகுதிப் பணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

## அங்கவீனர்களின் உரிமைகளை பாதுகாக்க விசேட குழுக்கள்!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற அங்கவீனர்களின் சமூக, பொருளாதார வாழ்வியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விசேட குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

சமூகத்தில் வாழ்கின்ற அங்கவீனமானவர்களை ஒன்று திரட்டி, அவர்களைக் குழுக்களாக அமைத்து, அந்தக் குழுக்கள் மூலம் அங்கவீனர்களது உரிமைகளைப் பேணும் வகையில் இதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட ஜெய்ப்பூர் செயற்கை அவயவப் பாவனையாளர் சங்கம் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் வரணி வடக்கு அரசினர் பாடசாலை

சுதுமலை—

வறணி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை- எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி இரண்டு ஆசிரியர்களுடன் இயங்கி வருகிறது.

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட இந்தப் பாடசாலைக்கென குடிநீர் வசதியோ, மலசல கூட வசதியோ இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

இங்கு தரம் 01 முதல் 05 வரையான 30 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் இந்தப் பாடசாலை 15 வருடங்களாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தப் பாடசாலையிலேயே முன்பள்ளியும் இயங்கி வருகின்ற போதிலும், சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானமும், தளபாட வசதிகள் இன்றி நிலத்தில் இருந்து கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## வடமராட்சிப் பிரதேசத்தில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள்

வடமராட்சி—

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் கோஷ்டி மோதல்கள், தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவிகள் மீதான சேஷ்டைகள் போன்ற கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையால் - அவற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


அண்மையில் சினிமாப்படக் கலாசாரத் தோற்றத்தில் மோட்டார் சைக்கிள்களில் கூரிய ஆயுதங்களுடன் வெளிப்படையாகவே இந்தக் கும்பல்கள் திரிந்தும், கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## ஊனமுற்றோருக்கு உதவி

சுதுமலை—

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கு- 10 சக்கர நாற்காலிகளும், 10 ஊன்று கோல்களும் அண்மையில் வழங்கப்பட்டன. புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சின் யாழ். செயலகத்தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பெரியவிளான், மாதகல் மேற்கு, சாவல்கட்டு, சுதுமலை தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த உடல் ஊனமுற்றவர்களுக்கே கிராம அலுவலரூடாக சக்கரநாற்காலிகளும், ஊன்று கோல்களும் வழங்கப்பட்டன. (91)



தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் 40 ஆவது தின விழாவில் புலோலி சந்தியிலிலுள்ள திருவுருவச்சிலைக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.பசுபதி மலர்மாலை அணிவிப்பதையும், பண்டிதரின் வேர்ச்சொல் அகராதி நூல் பிரதியை - புலோலி பொது நூலகத்துக்கான நூலை திருச்செல்வம் பெற்றுக் கொள்வதையம் படங்களில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : ஜெ.விதுஷிகா
முகவரி : பொலிகண்டி

அகவை நான்கு



பெயர் : சி.சாதனா
முகவரி : அரியாலை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:-
கூப்பன்கள் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# முயற்சிதான் வெற்றிக்கு முதற்படி

வாழ்க்கையின் ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டவேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் அவர்கள் விசேட தேர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனால், இதில் இவர்கள் பெற்றுள்ள வெற்றிகளாலேயே அவர்கள் செய்வது




எல்லாம் தவறின்றி இருந்திருக்கும் என்பது அதற்குப் பொருளல்ல.

தங்களுடைய தவறுகள், பின்னடைவுகளிலிருந்தே அவர்கள் தமது வெற்றிக்கான படிகளை அடைந்திருக்கக்கூடும். முயற்சிதானே வெற்றிக்கு முதற்படி! ஒருமனப்படுத்தலும், உறுதியும் எந்தத் துறையிலும் வெற்றி பெற உதவமுடியும். எல்லோருமே சேர் ஐசாக் நியூட்டனாகவோ, ஷேக்ஸ்பியராகவோ ஆகிவிட முடியாதுதான். அந்தளவு வேட்கையும் எல்லோருக்கும் இருக்காது.

ஆனால், நம் ஒவ்வொருவருக்கும் ஒரு இயல்பான ஆற்றல் இருக்கிறது. எங்களுடைய உள்ளார்ந்த திறமைக்கு இசைவாக நம்மை வளர்த்துக்கொள்ள முயற்சிசெய்ய வேண்டும். ஓவியக் கலையில் நாட்டமுடைய ஒருவன் எடிசனாகவோ, மார்க்கோணியாகவோ ஆகவேண்டும் என்று முயற்சி செய்தால், அவன் முட்டாளாகத்தான் இருக்கமுடியும். சோர்வு அடையாமல், விடாமுயற்சியுடன் உறுதியாகப் பாடுபட்டால், சிறந்த ஓவியர்களின் தரத்தை எட்டிப்பிடிக்கலாம்.

ஆனால், வருத்தப்படவேண்டிய அல்லது குறைபாடான விடயம் என்னவென்றால் - ஆற்றல்மிக்க ஆண்களையும், பெண்களையும் அளவுக்குமீறிப் பெரிய மனிதர்களாகச் செய்துவிடும் போக்கு நம்மிடம் இருப்பதுதான். மேலும், அந்தளவுக்கு நம்மால் உயரமுடியாது என்று நாமாகத் தவறாக எண்ணிவிடுகிறோம். உலகின் மாபெரும் மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் படிக்கும்போது, தொடக்கத்தில் அவர்களும் நம்மைப் போலவே சாதாரணமானவர்களாகத்தான் இருந்தார்கள் என்பது தெரியவரும்.

நம்மைப்போல் அவர்கள் தமக்கு முன்பிருந்த பெரியமனிதர்களை அளவுக்கு மீறிப் போற்றவில்லை. நாமும் அவ்வாறு உயர முடியாது என்ற நம்பிக்கையின்மையால் முடமாகிக் கிடந்துவிடவுமில்லை. மாறாக அவர்கள் ஆதர்சம்பெற்று, அவர்களைப் போல நாமும் உயரவேண்டும் என்று பாடுபட்டு முயற்சித்தவர்கள்.

கண்மூடித்தனமான பாராட்டுகள், புகழ்மாலைகள் அறிவு வளர்ச்சியைக் குன்றச்செய்துவிடும். இதனால், எம்மால் போற்றப்படுபவர்களின் குண நலன்களைப் பெரிதுபடுத்தவும், நம்மிடமுள்ளதைக் குறைத்து எண்ணவும் தொடங்கிவிடுகிறோம். இதன் விளைவாக அவர்களுக்கும், எமக்குமிடையேயுள்ள இடைவெளியை அதிகப்படுத்திக் கொள்கிறோம்.

இவ்வாறு பெருமளவில் நடக்கும்போது பாராட்டுப் பெறுபவர்கள் தங்களைப் பற்றியும், தங்களுடைய திறமைகளைப் பற்றியும் மிகப்பெரிதாக எண்ணிக்கொண்டுவிடுகிறார்கள்.

அத்துடன் கண்மூடித்தனமாகத் தம்மைப் பாராட்டுபவர்களை, கேவலமாக எண்ணத் தொடங்கிவிடுகிறார்கள்.

எனவே கண்மூடித்தனமாக, அவர்களைப் போற்றாமல், அவர்கள் உயர்ந்ததற்கான காரணங்களை ஆராய்ந்து, முடிந்தவரை நமது வாழ்விலும் அந்த இலட்சியங்களைக் கடைப்பிடிக்க முயல்வதே நல்லது.

அவர்களைப் புகழ்வதால் மட்டும், அவர்களைப்போல நாம் ஆகிவிடமுடியாது. எப்போதும் நாம் நாமாகத்தான் இருப்போம். எனவே அவர்கள் செய்ததை நாமும் செய்ய முயலும்போதுதான், நமது தரத்தை உயர்த்திக்கொண்டு, வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும்.

---

## முகாமைத்துவ நுட்பங்களால் நிறுவனத்தை எவ்வாறு முன்னெடுப்பது...?

முகாமைத்துவம் என்பது மிக நுணுக்கமான,மிக விரிவான அவரவர் ஆழுமைப் பாங்கிற்கேற்பான விடயம். இதில் ஒரு முகாமையாளர் அணுகுகின்ற முறைக்கமையவே, நிறுவனத்தின் வெற்றிச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். முகாமைக்கென்ற வரையறைகள் வரைவிலக்கணங்களில் இருப்பினும், குறிப்பிட்டகளம், குறிப்பிட்ட ஆளணி ஆளுமைகளிற்கமைய செயற்திட்டங்களைமாற்றி, நிறுவனத்தின் இறுதி இலக்கை அடைவதே முகாமைத்துவ நுட்பங்களாகும்.

இப்படிப்பட்ட நுட்பங்களுக்கு முகாமைத்துவ வரைவிலக்கணங்களிலும் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவம் என்பது "ஒரு நிறுவனத்தின் சட்ட திட்டங்களுககும், அந்த நிறுவன ஊழியர்களின் விட்டுக்கொடுப்புக்களுக்கூடாக நிறுவனத்தை வெற் றிகரமான இறுதி இலக்குக்கு இட்டுச் செல்வதே இதுவாகும்".

இன்றைய எமது சமூகத்தில் பல நிறுவனங்களில் இப்படிப்பட்ட முகாமைத்துவச் சிக்கல்கள் நாளுக்கு நாள் அதி கரித்து வருகின்றன. இது ஊழியர்களுக் கிடையிலான முரண்பாட்டை வளர்த்து,நிறுவன வெளியீட்டையே தாக்குமளவுக்கு மேலோங்கிக் காணப்படுகிறது. இதனால் இந்த முகாமைத்துவச் சிக்கல்களையும், அதைத் தீர்க்கும் நுட்பங்கள் பற்றியும் நோக்குவது தொழில் மலரின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாக மிளிர்வதால், இந்தத்தொழில் மலர் இந்த முகாமைத்துவப் பிரச்சினைகள், நுட்பங்கள் பற்றித் தொடர்ச்சியாக ஆராயமுற்பட்டுள்ளது.



### முகாமையாளரின் வகைக் கட்டமைப்பு

முதலில் ஒரு முகாமையாளர் தனது முகாமைக்கட்டமைப்புப் பரப்பளவைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், நிர்வாகத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்குக் காரணம் தேவையற்ற வேலைத்திட்டத்துக்குள் பிரவேசிப்பது ஆகும். முகாமையாளர்களில் வகைகள் பல உண்டு. நிர்வாகமுகாமையாளர், பொதுமுகாமையாளர், வேலை முகாமையாளர், பகுதிரீதியான முகாமையாளர், விற்பனை முகாமையாளர் என இது பல வகைப்படும். இந்த வகையில் ஒவ்வொரு முகாமையாளர்களும் தாம் எந்த வகையினர், எந்தப் பரப்பளவு தமக்குள் உள்ளடக்கப்படுகிறது என்பது பற்றிய ஒரு தெளிவு நிலை உருவாக வேண்டும். அதாவது - தனது பரப்பளவில் உள்ள வேலைத்திட்டங்கள் யாவை, இதன் வெளியீடு எப்படியமைய வேண்டும் என்பது பற்றிய ஒரு தெளிவு தனது பதவி நிலைப்பாட்டினூடாக உருவாக வேண்டும். இந்தத்தெளிவுநிலை உருவானால் மாத்திரமே மேலதிக செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். இந்தத்தெளிவு நிலை தனக்குள்ளே உருவான பின்பு அடுத்த கட்டமென்ன என்பதை அடுத்த தொழில் மலரில் நோக்கு வோம்.

**ஆர்.கே.மேனன்**

---

# ஒரு நீண்ட கால முதலீடே ஒரு பொருள் குறித்த விளம்பரம்

'மக்களின் கவனத்தை ஒரு குறிப்பிட்ட பொருளை நோக்கித் திருப்புதல் என்பதை விளம்பரம்' எனக் குறிப்பிடலாம். விளம்பரம் மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது.

**அறிவித்தல்**

சந்தையில் உள்ள பொருள் பற்றித் தெரிவிப்பது, பொருளின் வெவ்வேறு பயன்கள் பற்றித் தெரிவிப்பது, பொருளின் விலை மாற்றம் பற்றி அறிவிப்பது, பொருள் செயற்படும் விதம் பற்றி விளக்குவது ஆகியன இதில் அடங்கும்.

**இணங்கச் செய்தல்**

ஒரு உற்பத்திப் பொருளை உடனே வாங்கத் தூண்டுதல், ஒருவர்மூலம் மற்றவரையும் வாங்கச் செய்தல் போன்றவை.

**நினைவூட்டல்**

பொருள் கிடைக்கும் இடம் பற்றி நினைவூட்டல், விழாக்காலப் பொருட்களை முன் கூட்டியே நினைவுபடுத்தல்.

பொதுவாக விளம்பரங்களை -

1. உற்பத்திப் பொருளுக்கான விளம்பரம்
2. சேவை குறித்த விளம்பரம்
3. நிதி தொடர்பான விளம்பரம்
4. வேலைவாய்ப்பு விளம்பரம் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

விளம்பரங்களை, விளம்பர ஏஜென்சிகளின் உதவியோடு அல்லது நேரடியாக நாளிதழ்கள், மாத ஆண்டு இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் தேவைக்கேற்றபடி வெளியிட வேண்டும்.

**வணிகத்துக்கு விளம்பரம் அவசியமா?**

பொருளை உற்பத்தி செய்வதன் நோக்கமே அதை விற்பனை செய்வது தானே? பொருளை விற்பனை செய்ய முடியாவிட்டால், வியாபாரம் நடைபெறமுடியாது. விற்பனை என்பது வியாபாரத்துக்கு இரத்த ஓட்டம் போன்றது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களிலிருந்து, நவீன தொழில் நுட்பப் பொருட்கள் அனைத்தையும் விற்பது வணிகம் மூலமே.

எனவே, 'வணிகம் இல்லையேல் வாழ்வு இல்லை, விற்பனை இல்லையேல் வணிகம் இல்லை' வணிகத்தில் போட்டிகள் பெருக்கிவிட்ட நிலையில் ஒவ்வொருவணிகரும் தன்னுடைய பொருள் அதிகளவில் விற்பனை ஆவதற்குரிய சூழலை ஏற்படுத்தும் கருவியாகப் பயன்படுத்திக் கொள்வது விளம்பரத்தைத்தான்.

**விளம்பரத்தால் ஏற்படும் நன்மைகள்**

☆ விற்பனை அதிகரிக்கிறது.
☆ நிலையான தேவையை ஏற்படுத்துகிறது.
☆ விற்பனைச் செலவு குறைகிறது.
☆ விற்பனையாளனுக்கு உதவுகிறது.
☆ நம்பிக்கை உண்டாகுகிறது.
☆ தரம் உயர்கிறது.
☆ இலாபம் அதிகரிக்கிறது.
☆ விநியோகத்தர், உற்பத்தியாளர் உறவு சிறப்பாகும்.
☆ வாழ்க்கைத் தரம் உயர்கிறது.
☆ நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பு தருகிறது.

**தீமைகள்**

☆ பெருமைக்காகப் பொருட்களை வாங்கச் செய்கிறது.
☆ தவறான குறிப்புகள் தரப்படுகின்றன.
☆ பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது.
☆ தேசிய வளங்கள் வீணடிக்கப்படுகின்றன.
☆ ஏகபோக உரிமையை உண்டாக்குகிறது

**விளம்பரம் மட்டும் போதுமா?**

போட்டிகள் நிறைந்துள்ள இந்தக் காலத்தில் வெறும் விளம்பரத்தால் மட்டும் விற்பனை செய்யமுடியாது. தரம் என்பதை எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும். ஒரு பொருளுக்குத் தொடர்ந்து விளம்பரம் செய்தாலும், தரம் இல்லையேல் விற்பனை நடை பெறாது. ஒரு வாடிக்கையாளரை இரண்டு முறை ஏமாற்ற முடியாது என்பதன் பொருளை வணிகத்தில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.


விளம்பரம் என்பது - ஒரு நீண்ட கால முதலீடு. ஒரு நிறுவனத்தினுடைய பொருள், பெயரை உருவாக்கவும் விளம்பரம் உதவுகிறது. ஆகவே ஒரு விளம்பரமானது, விளம்பரப்படுத்தும் பொருளின் தரம், அளவு, விலை, கிடைக்கும் இடம், விற்பனைக்குப் பின் பழுது பார்த்துத் தருதல் போன்ற தகவல்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

விளம்பரம் - பொருட்களை விற்பனை செய்து தராது. தொடர்ந்து விளம்பரம் செய்யும் போது, நுகர்வோரிடம் வாங்கலாமே என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும். அதன் பின் தரம், விலை போன்ற காரணிகளைச் சார்ந்து தான் விற்பனை அமையும்.

விளம்பரம் பற்றி சுருக்கமாகவும், விளக்கமாகவும் பின்வருமாறு கூறலாம்-

என்னிடம் உள்ள பொருட்களை நான் சொன்னால்தானே உங்களுக்குத் தெரியும். நான் உங்களிடம் கூறாமல் இருந்து விட்டால், என்னிடம் இருக்கும் பொருட்களை யாருக்காவது தெரியுமா? ஒருவருக்கும் தெரியாது?

அதுபோலவே விற்பனை செய்ய விரும்பும் எவரும் தன் பொருளைப் பற்றி நேராகவோ அல்லது பத்திரிகைகள், தொலைக்காட்சி மூலமாகவோ தான் குறிவைக்கும் வாடிக்கையாளருக்குத் தெரிவிப்பதே விளம்பரம் ஆகும். எனவே விளம்பரமின்றி வணிகத்தில் ஈடுபடமுடியாது. அதே நேரம் விளம்பரம் பார்த்துப் பொருட்களை வாங்கிய நுகர்வோர் தரத்தின் மீது திருப்தியடைந்தால், பிறருக்கும் அந்தப் பொருட்களைச் சிபாரிசு செய்வார்கள்.






# வடபிராந்திய விவசாயிகளுக்குத் தேவைப்படும் வயல் பாடசாலைகள் பற்றிய கண்ணோட்டம்

வடபிராந்தியமானது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்குகிறது. அவை யாவன - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகும். இந்தப் பிராந்தியத்தில் நெல் உற்பத்தி முதலிடத்தை வகித்தபோதும், புள்ளிவிபரத்தின்படி 90,000 ஹெக்ரெயர் நெற்பரப்பில் மூன்றில் ஒரு பங்குதான் தற்பொழுது பயிரிடப்படுகிறது.

வடபிராந்தியத்தின் மேற்கூறிய ஐம் பெரு மாவட்டங்களில் பலவிதமான நிலப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் மிளகாய், வெங்காயம், உரு



ளைக்கிழங்கு, புகையிலை போன்றவைகள் பயிர்செய்யப்படுகின்றன. மேலும் விவசாயிகள் பல்வேறு உள்ளூர் மற்றும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களை வருடம் முழுவதும் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்கின்றனர். மற்றைய நான்கு மாவட்டங்களிலும் நிலப்பயிர்களான வெங்காயம், மிளகாய், அவரைப்பயிர்கள், மரக்கறிப்பயிர்கள், விவசாயக் கிணறுகள் மூலம் பெறப்படும் நீரைக்கொண்டு பயிர்செய்யப்படுகின்றன.

முக்கியமாக முல்லைத்தீவில் பயறும், வவுனியாவில் நிலக்கடலையும் பெருமளவில் பயிர்செய்யப்படுவதை நாம் காணலாம். இன்று இந்த மாவட்டங்களில் முக்கியமாக - யாழ்.மாவட்டம் மிகச்சிறந்த தரமுடைய கோவா, கரட், லீக்ஸ், உருளைக்கிழங்கு போன்ற மரக்கறிவகைகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றோம்.

நிரந்தரப் பயிர்களான - மா, பலா, வாழை, தோடை, முந்திரிகை என்பன இந்த ஐந்து மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவில் செய்கை பண்ணப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் மாவும், பலாவும் வீட்டுத தோட்டப் பயிர்களாக செய்கை பண்ணப்பட்டு, பெருமளவு வருமானத்தை ஈட்டுவனவாகவுள்ளன.

ஒரு வருத்தத்துக்குரிய செய்தி என்னவெனில் - இந்தப் பயிரினங்களில் பெரும்பான்மையானவை பல்வேறு காரணங்களால் அழிவடைந்து, அற்றுப்போய்க் கொண்டிருக்கின்றன. இவைகளை இந்த வழியிலிருந்து பாதுகாப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை அல்லவா!

வடபிராந்தியத்தில் தென்னை ஒரு முக்கிய பல்லாண்டுப் பயிராகும். தென்னை அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் கடற்கரை மற்றும் வாவிகளை அண்டிய பகுதிகளில் காணப்படுகின்றன. வவுனியாவில் இவை குளங்கள், நீர்ப்பாசன வடிகால்களுக்கு அருகாமையில் வளர்வதையும், யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்படுவதையும் காணலாம். ஒரு வீட்டில் நல் விளைச்சலைத் தரக்கூடிய 3-5 தென்னைகள் இருந்தால், வீட்டுத் தேவையைப் பூரணமாக நிவர்த்தி செய்யமுடியும். முன்பு பளைப் பிரதேசத்தில் சிறிய தென்னந் தோட்டங்கள் இருந்தன. ஆனால், யுத்தம் காரணமாக அவை அழிந்து சின்னா பின்னமாகி இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவற்றுக்கு மீண்டும் புத்துயிர்ப் பளிப்பதன் மூலம், பழைய நிலைக்குக் கொண்டுவருவது எம் சமுதாயத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

தென்னையைப் போன்றே பனையும் வடபிராந்திய மக்களுக்கு முக்கியமாக - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மக்களுக்கு ஒரு முக்கிய வருமானம் தரக்கூடிய பல்லாண்டுப் பயிராகும். பலவிதமான பயனைத் தருவதால் இதனைக் "கற்பகதரு" என்றும் அழைக்கிறோம். கிட்டத்தட்ட 30,000 குடும்பங்கள் இந்த விருட்சத்தின் நேரடிப்பயனை நம்பி வாழ்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த சில தசாப்தங்களில் இவை மிக மோசமாக அழிக்கப்பட்டதன் மூலம், வடபிராந்தியத்தின் வருமானம் மிக மோசமாகச் சீர்குலைக்கப்பட்டதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே இந்தப் பனை வளத்தைப் பெருக்குவதற்கான ஆக்க பூர்வமான திட்டங்களை உருவாக்குவது நமது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

பொதுவாகக் கூறப்போனால் வடக்கில் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்ட, உட்படுத்தப்படும் பல பயிர்களின் பரம்பரை பரம்பரையாகப் பயிரிட்ட பெரும்பான்மை இனங்கள், படிப்படியாக அற்றுப் போய்க் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இவற்றை நாம் கவனமாகப் பாதுகாப்பது அத்தியாவசியமானதொன்றாகும். விவசாயத்தைப் பொறுத்தமட்டில் இவைதான் எங்களின் அரியசொத்துகள். ஆதலினால் இவ்வாறு அற்றுப்போகும், அழிந்துகொண்டு போகும் பயிரினங்களை இனங்கண்டு, அவைகளைத் தேடிக்கண்டறிந்து, சேகரித்து, கவனமாகப் பாதுகாத்து வைத்திருப்பது விவசாய விஞ்ஞானிகளின் ஒரு முக்கிய பங்காகும். எனவே இதற்குரிய நடவடிகைகளை உடனடியாக எடுப்பது அத்தியாவசியமானதொன்றாகும். இதனை எங்கள் வடக்கு பிரதேசத்துக்குரிய விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் பயிரினங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் நிலையம் ஒன்று அமைத்தலுக்கான திட்டத்துக்கு முதலிடம் அளித்தல் மூலம் மேற்கொள்ள முடியும்.

வடபிராந்தியத்தில் விவசாயம் ஸ்தாபிக்கப்பட்டு நல்ல நிலையில், பல்லாயிரம் ஆண்டுகளாக செய்கை பண்ணப்படுவதுடன், பொருளாதார முன்னேற்றத்திலும் முக்கிய பங்கை வகிக்கிறது. இந்த விவசாயத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு விவசாயிகளின் விவசாய அறிவையும், திறமையையும் முன்னேற்றல் அவசியம். இதனைக் கவனத்திற்கொண்டு எங்கள் எண்ணத்தை, பார்வையை வயல் பாடசாலைகளுக்குத் திசைதிருப்புவோம். வயல் பாடசாலையின் முக்கிய நோக்கையும், அதன் கட்டமைப்பையும் இப்பொழுது சற்று ஆராய்வோம்!



### வயல் பற்றிய நோக்கு

வயல் பாடசாலைகள் விவசாயிகளின் விவசாய அறிவு, திறமை என்பவற்றை வளர்க்கவும், 'அதிகாரமளிக்கவும் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாகும். இவைகள் விவசாயிகளை மனந்திறந்து பகுத்தறிவுடன் ஆலோசிப்பதற்குத் தூண்டுகின்றன. அத்துடன் விவசாயிகளின் தன்நம்பிக்கைக்கும், சுயதிருப்திக்கும் வழிகாட்டியாகும்.

### வயல் பாடசாலையின் கட்டமைப்பு

இந்தப் பாடசாலை விவசாய விடயங்களில் தனிப்பட்ட அக்கறையுள்ள விவசாயிகளை உள்ளடக்கும். இவர்கள் ஒழுங்காக ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒன்றுகூடி, விவசாயம் சம்பந்தமான ஒரு குறிபபிட்ட விடயத்தை அலசி ஆராய்வார்கள். பின்வருவன அவ்வாறான விடயங்களாக அமையும்.

- ☆ ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பயிரின் பராமரிப்பு
- ☆ நாற்று மேடை பராமரிப்பு
- ☆ ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடு
- ☆ சேதனப்பண்ணை விவசாயம்
- ☆ கால்நடை பராமரிப்பு (விலங்கு வேளாண்மை)
- ☆ ஒருங்கிணைந்த விவசாய முறை
- ☆ பயிராக்கச் செய்முறைகள்
- ☆ தரமான விதை உற்பத்தி
- ☆ உணவு பதனிடல்
- ☆ ஏனைய வருமானத்தை உண்டாக்கும் செயற்பாடுகள்.

வயற்பாடசாலை என்பது விவசாயிகள் ஒன்றுகூடிச் செயற்படும் நிகழ்வாகும். இந்தச் செயற்பாடுகள் வயலில் பெறும் அனுபவங்களாகவே இருக்கும். அதனால் தத்துவரீதியான, கூர்மையான விளக்கம் மிகமுக்கியமானது. இங்கு வயல் தான் இந்தப் பாடசாலை ஆசிரியர் இந்தப் பாடசாலைக் கல்விக்குத் தேவையான பொருட்களான பயிர்த்தாவரங்கள், பீடைகள், நோய்கள், வயற்பிரச்சினைகள் போன்றன வயல்களில் இருந்தே பெறப்படும். இந்தப் பாடசாலையின் தொடக்கமும், முடிவும் வயலில் தான்.

### வயல் பாடசாலை நடத்துநர்

இந்தப் பாடசாலையை நடாத்துவதற்கு விவசாயத் தொழிநுட்பத்தில் நன்கு தேர்ச்சியுள்ள நடத்துனர் தேவை. இவர் இந்தப் பாடசாலையின் அங்கத்தவர்களைச் சரியான முறையில் பயிற்சியளித்து, அவர்களுக்குத் தேவைப்படும் விளக்கங்களை அனுபவங்களின்மூலம் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விடயத்தில் நடத்துநர் நல்ல அனுபவமுடையவராக இருத்தல் அவசியம். சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் தகுந்த முறையில் வயற்பாடசாலை விவசாயிகளுக்கு விளக்கத்தையும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய அனுபவத்தையும் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

இந்தப் பாடசாலையில் விரிவுரைகள் நடத்தப்படமாட்டாது. இதில் பங்குபற்றும் விவசாயிகள் - விவசாயம் சம்பந்தப்பட்ட அனுபவங்களைத் தகுந்த முறையிலும், தேவையான அளவிலும் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. வயற்பாடசாலை நடத்துநர் எந்த நிறுவனத்திலும் பயிற்சிபெற்றுத் தேர்ச்சி அடைந்தவராக இருக்கலாம். (அரசாங்கம், அரசாங்கமற்ற, தனியார் நிறுவனங்கள்) இதன் முக்கியத்துவம் என்னவென்றால் - இந்தப் பாடசாலையில் பயின்று, நல்ல அனுபவம் பெறும் விவசாயிகளும் காலப்போக்கில் நடத்துநராக வரும் சந்தர்ப்பங்களும் உண்டு.

(தொடரும்...)

பேராசிரியர் வை.அருள்நந்தி
B.Sc(Agric), M.Sc, Ph.D
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 40/= | 50/= | 30/= | 30/= | 40/= | 60/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 15/= | 15/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 80/= | 80/= | 80/= | 80/= | 90/= |
| கத்தரிக்காய் | 10/= | 20/= | 30/= | 15/= | 20/= | 10/= | 30/= |
| பாகற்காய் | 25/= | 40/= | 50/= | 30/= | 40/= | 40/= | 45/= |
| கரட் | 40/= | 50/= | 60/= | 60/= | 60/= | 70/= | 60/= |
| பீற்றூட் | 10/= | 20/= | 30/= | 20/= | 15/= | 20/= | 40/= |
| முருங்கைக்காய் | 120/= | 100/= | 100/= | 120/= | 140/= | 140/= | 100/= |
| வெங்காயம் | 40/= | 35/= | 40/= | 40/= | 45/= | 50/= | 60/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 50/= | 30/= | 40/= | 60/= | 60/= |

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிரதிபலன்தான் நீதிநிர்வாக செயற்பாடு

## தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



சர்வதேச சமூக அமைப்பில் விடுதலைக்கும், நீதிக்கும் போராடி வருகின்ற மக்களுக்கான வழி காட்டியாக தமிழீழ நீதித்துறை யின் சட்டவாக்க செயலகம் திகழும் என, தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரி வித்தார்.

தமிழீழ நிர்வாகத்துறையின் சட்டவாக்க செயலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

தமிழீழ நீதி நிர்வாகத்துறை யின் சட்டவாக்க செயலகத்தின் திறப்பு விழா நிகழ்வானது - உண்மையில் தமிழீழ வரலாற் றில் பெரியதொரு வளர்ச்சியை நாம் அடைந்திருக்கின்றோம் என்பதையே எடுத்துக்காட்டு கிறது.

தமிழீழ விடுதலைப் போரா ட்ட வரலாற்றில் வார்த்தைக ளால் வர்ணிக்க முடியாத பல் வேறுபட்ட தியாகங்களை மேற் கொண்டு, பல்லா யிரக்கணக் கான உயிர்களை அர்ப்பணித்து, எத்தனையோ கொடுமையான இராணுவ அட்டூழியங்கள், இரா ணுவ நட வடிக்கைகளுக்கு முகம் கொடுத் துள்ளோம்.

அரசின் கொடிய பொருளா தாரத் தடைகள், வல்லாதிக் கங்களின் ஆக்கிரமிப்பு இவைக ளுக்கு முகம் கொடுத்து, எமது போராட்டத்தை நாம் பெரிய வெற்றிப் பாதையினூடாக வழி நடத்துகிறோம் என்பதைத் தான் இந்த நிகழ்வு துலாம்பர மாக எடுத்துக்காட்டி நிற்கிறது.

எமது தேசிய விடுதலைப் போராட்டமானது - வெறுமனே ஒரு தேசிய விடுதலைக்கான போராட்டமல்ல. அறநெறிக கோட்பாடுகள், சமூக நீதிகள், மனிதாபிமானம் இவற்றைஅடிப் படையாகக் கொண்ட சமூக விடு தலையுடன் கூடிய ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும்.

இந்தச் சமூக விடுதலையின் பால் நாம் சமகாலத்திலேயே எமது போராட்டத்தின் கொள் கைகளுக்கும், எமது விடுதலை இயக்கத்தின் கொள்கைகளுக் கும் எமது தலைவரின் வழி நடத்தலுக்கும் ஏற்ப, சமூக விடு தலைக்கான பல்வேறு கட்டுமா னங்களை நாம் உருவாக்கி வந்தி ருக்கிறோம்.

அந்தக் கட்டுமானங்கள் பல் வேறு சவால்களுக்கு மத்தியில் வெற்றிகரமான முறையில் வடி வமைக்கப்பட்டு, செயற்படுத் தப்பட்டு இன்று மக்களின் பலத் துடன், போராளிகளின் பலத்து டன், தலைவரின் வழிநடத்த லுடன், சகலரது பின்பலத்து டன் மிகவும் வெற்றிகரமான முறையில் அவை வளர்த்தெடுக் கப்பட்டு வருகின்றன.

இந்தச் சமூக விடுதலையை அடிப்படையாகக் கொண்ட எமது தேசிய விடுதலைப் போராட் டமானது - அந்தக் கட்டமைப் புகளைக் கொண்ட மிகவும் முக்கியமான உச்சக் கட்டமைப் பாக திகழ்வதுதான் தமிழீழ நீதி நிர்வாகத்துறை.

இந்தத் துறையின் ஊடாக எமது மக்களின் சமூக மேம்பாட் டுக்கான, சமூக விடுதலைக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டு, இங்கே நடைமுறைப்படுத்திக் கொண்டு வருவதை நாம் வர லாற்றினூடாக, கண்கூடாக மிக வும் துலாம்பரமாக எல்லோரும் பார்க்கக்கூடியவாறு இன்று இங்கே செயற்பட்டுக்கொண்டி ருக்கிறது.

எமது விடுதலைப் போராட் டம் என்பது - ஒரு புரட்சிகர மான விடுதலைப் போராட்டம். ஒரு முற்போக்கான விடுதலைப் போராட்டம். முற்போக்குக் கொள் கைகளை, புரட்சிகரக் கொள்கை களை அடித்தளமாகக் கொண்ட ஒரு விடுதலைப் போராட்டம். அது மட்டுமல்ல, மக்கள் ஆணை பெற்ற ஒரு விடுதலைப் போரா ட்டம்.

1977இல் மக்கள் ஆணை பெற்று, மக்களின் ஆணைக் கேற்ப மக்களின் அபிலாசை களை நிறைவு செய்கின்ற சமூக விடுதலையுடன் கூடிய ஒரு தேசிய விடுதலைப் போராட் டம் என்பது - வரலாற்றின் ஊடாக இன்று எல்லோருக்கும் நன்றா கத் தெரிகிறது. அந்த வகையில் தான் தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் செயற்பாடு என்பதை எமது மக்களின் சமூக வாழ்வில் சமூக மேம்பாட்டுக்கான, சமூக மறுமலர்ச்சிக்கான ஒரு அமைப் பாக நாம் இதைப் பார்க்கிறோம்.

தமிழீழ நீதி நிர்வாகத்துறை ஆரம்பித்த போது - பல்வேறு பட்ட தரப்புகளிலிருந்து பல் வேறு விதமான கருத்துகளும், வாதப்பிரதிவாதங்களும் அந்தக் கால கட்டத்தில் மக்கள் மத்தி யில் ஒரு சிலரால் முன் வைக் கப்பட்டது.

அவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்தாற்போல, இன்று தமிழீழ பிரதேசத்தில் குறிப் பாக, எமது தாயகப் பிரதே சத்தில், எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது நீதி நிர் வாகத்துறையின் செயற்பாடுக ளுக்கும் , எமது தாயகப் பிரதே சத்தில் இதுவரை எம்மால் விடுவிக்கப்படாது இருக்கும் அரச கட்டுப்பாட் டில் உள்ள நீதி நிர்வாகத்துறைக்கும் உள்ள வேறுபாடுகளை நாம் இன்று எல்லோரும் நன்றாகக் காணக் கூடியதாக இருக்கிறது.

எமது விடுதலைப் போராட் டம் ஆரம்பிப்பதற்கு முன்னர், இலங்கையின் நீதித்துறையில் நாம் நீதியை எதிர்பார்க்க வேண் டுமானால், காணி விற்று, சொத்து விற்று வழக்காடிய வரலாறுகள் எமது கடந்த கால வரலாற்றில் ஏராளம் இருக்கின்றன.

ஆனால் இன்று எமது விடு தலைப் போராட்டத்தின் பிரதி பலிப்பாக தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் செயற்பாடு அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

கடந்த காலத்தில் இலங்கை யின் நீதித்துறை இங்கே இயங் கிய போது, தனி மனிதர்களு டைய பிரச்சினை என்றாலும் சரி, அரசியல் பிரச்சினை என்றா லும் சரி நீதித்துறை பேரினவாத கொள்கைகளை அடிப்படையா கக் கொண்டு, எமது மக்களின் வாழ்க்கையை சிதறடிக்கக் கூடிய வகையில் தான் அவர்களின் செயற்பாடுகளும், தீர்ப்புகளும் அந்தக் கால கட்டத்தில் இருந்தன.

ஆகவே தான் எமக்கு ஆணை தந்து, அந்த ஆணையின் படி மக்க ளின் அரசியல் அபிலாசைகளை, மக்களின் எதிர்பார்ப்புகளை அந்த எதிர்பார்ப்புக்களுக்காக அந்த அபிலாசைகளுக்காக முற்று முழுதாக தம்மை அர்ப்பணித்துப் போராடுகின்ற ஒரு விடுதலை இயக்கமாக இந்த விடுதலை இயக் கம் விளங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட தேவைக்குட்பட்டோருக்கு விளையாட்டுப் போட்டி நடத்த ஏற்பாடு

வவுனியா —

வவுனியா மாவட்ட வலுவிழந் தோர் புனர்வாழ்வு நிறுவனத் தால் விசேட தேவைக்குட்பட்ட வர்களுக்கான விளையாட்டுப் போட்டி வவுனியாவில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள் ளது. போரூட் நிறுவனத்தின் அனு சரணையுடன் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் சீட் நிறுவ னத்தால் நடத்தப்பட்டுவரும் வலுவூட்டல் வளாக மாணவர்க ளுக்கும், ஓகன் நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் புதுவாழ் வுப் பூங்கா மாணவர்களுக்கும் மற்றும் ஓகன் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சமூகசார் புனர்வாழ்வுத்திட்டத் தின் கீழ் வவுனியா, வவுனியா தெற்கு, நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவுகளைச்சேர்ந்த சிறுவர்களுமாக 200 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

செவிப்புலனற்றோர்கள், பேச் சுத் திறனற்றோர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் போன்ற பல்வேறு விசேட தேவையுடையோர் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட் டிகள், நீளம் பாய்தல், உயரம் பாய் தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிக ளில் பங்கு கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வவுனியா அரச அதிபர், பிரதேச செயலா ளர், போரூட் நிறுவனப் பிரதிநிதி கள், ஏனைய அரச, அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின வீர, வீராங்கனை கள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில்- விசேட தேவைக்குட் பட்டோர் அங்கவீனம், ஆற்றல் குறைவு அல்ல என்பதை சமூகத் தின் சக பிரஜைகளுக்கும் நிருபிக் கவுள்ளனர்.

## முல்லைத்தீவு - விசுவமடுப் பிரதேசத்தில் பொது அமைப்புகளுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு-விசுவமடு பிர தேசத்துக்குட்பட்ட அனைத்து ஊரக பொது அமைப்புகளுக் கான கலந்துரையாடல் - தர்ம புரம் தொழிற் பயிற்சி மண்ட பத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மக் கள் எழுச்சிச் செயற்குழு உறுப்பி னர் முருகவேள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட செயற்குழுச் செயலா ளர் வேளமாலிகிதன், விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேர வைச் செயலாளர் பத்மநாதன், விசுவமடு பிரதேச அரசியற்து றைப் பொறுப்பாளர் சோழநில வன், கிளிநொச்சி மாவட்ட மக்கள் எழுச்சி செயற்குழுத் தலை வர் பிரபாகரன் ஆகியோர் நிக ழ்த்தினர்.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் எழுச்சிப் போராட்டங் களை எதிர்வரும் காலங்களில் நடத்துவது தொடர்பாக கருத் துப்பரிமாறல்கள் மேற்கொள் ளப்பட்டு, அது குறித்து ஆராயப் பட்டுள்ளது.

# கடற்தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் அனைவரையும் இணைக்க நடவடிக்கை!

வடமராட்சி —

வடமராட்சிகிழக்குப்பிரதேசத் தில் கடற்தொழிலாளர்களின் நன்மை கருதி, கடற்தொழில் திணைக்களத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட கடற்தொழிலா ளர் ஓய்வூதியத்திட்டத்தில் கடற் தொழிலாளர் அனைவரையும் இணைத்துக்கொள்வதில் தாளை யடி-ஆழியவளை கடற்தொழில் பரிசோதகரும், ஒக்ஸ்பாம் நிறுவ னத்தினரும் இணைந்து செயற் பட்டு வருகின்றனர்.

கடற்தொழிலாளர்களின் நன்மை கருதி உருவாக்கப்பட்ட இந்த கடற் தொழிலாளர் ஓய்வூதியத் திட் டத்தில் இணைபவர்களுக்கு 60 வயதுக்குப் பின்னர் மாதாந்தம் ஓய் வூதியப் பணம் வழங்கப்படும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கடற் தொழிலாளர் ஓய்வூதியத்திட் டத்தில் யாழ்.மாவட்டத்திலே ஆகக் குறைந்தளவு தொழிலா ளர்களே இணைந்துள்ளனர்.

இந்த நிலை மாற்றப்பட்டு, இந்த பிரதேசத்திலுள்ள அனைத்து கடற்தொழிலாளர்களையும் ஓய் வூதியத்திட்டத்தில் இணைக்கும் வகையில், ஒக்ஸ்பாம் நிறுவனம் இந்தப் பிரதேசத்தில் நடைமுறை ப்படுத்தி வரும் "வேலைக்கு ஊதி யம்" திட்டத்தின் மூலம் கிடைக் கும் நாளாந்த சம்பளப் பணத்தை ஓய்வூதியத் திட்டத்தின் கட்டுப் பணத்துக்காக வழங்கி வருகிறது.

இதற்கான அனைத்து நடவ டிக்கைகளையும் கிராமிய மட் டக் கடற்தொழிலாளர் சங்கங்களு டன் இணைந்து கடற்தொழில் பரிசோதகர் ந.கணேசமூர்த்தி மேற்கொண்டுவருகிறார். (21)

## சிறுவர்களுக்கான கண்காட்சி நிகழ்வு

வவுனியா —

புளியங்குளம் - மதியாமடு மின்னொளி முன்பள்ளியின் கண்காட்சி நிகழ்வு - அண்மையில் முன்பள்ளி ஆசிரியை செ.ஞானமலர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் நளாயினி ஏற்றிவைத் தார். கண்காட்சி மண்டபத்தை மதியாமடு விவேகானந்தா வித்தியாலய அதிபர் கி.சிவசோதி நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வுக்குப் பெருமளவிலானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை - 28

1586 - முதன்முதலாக உருளைக்கிழங்கு ஐரோப்பா முழுவதும் சேர் தோமஸ் ஹாரியட் என்பவரால் அறிமுகப்படுத் தப்பட்டது.

1746 - பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட அமெரிக் கப் பத்திரிகையாளர் ஜோன் பீற்றர்சங்கர் காலமானார்.

1777 - வொர் மாண்டில் சொத்துரிமை நிபந்தனை இல்லாது அனைத்து ஆண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

1862 - நைல்நதி விக்ரோரியா ஏரியில் இருந்தே உற்பத்தியாகி றது என்பதை ஜோன் ஹானிங் ஸ்பெக் என்பவர் கண்டு பிடித்தார்.

1868 - அனைத்து இன மக்களதும் உரிமைகள் பற்றி அமெரிக்க அரசியல் சட்டத்தின் 14ஆவது திருத்தம் நிறைவேற்றப் பட்டது.

1917 - பிரிட்டனில் - இராணுவத்தில் கவசவாகனப் படையணி ஒன்றைத் தனியாக அமைப்பதற்கான அரச கட்டளை பிறப் பிக்கப்பட்டது.

1918 - பிரேஸிலில் உள்ள ஜேர்மனிய வங்கிகளை மூடி விடும் படி பிரேஸில் அரசு உத்தரவிட்டது.

1920 - போலந்து-செக்கோஸ்லேவியா நாடுகளுக்கிடையிலான டெஷ்ச் சென் உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டது.

1926- உலகப் போர் மூழுமாயின், பனாமாக்கால்வாயை காப் பாற்றிக்கொள்ள உதவும் ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக் காவும், பனாமாவும் ஒப்பமிட்டுக்கொண்டன.

1937 - ஜப்பானிய படையினர் பீஜிங் நகரைக் கைப்பற்றினர்.

1972 - இந்தியாவும், பாக்கிஸ்தானும் சிம்யா ஒப்பந்தம் என்ற உடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

1973 - ஸ்கைலாப் -3 என்ற விண்வெளி ஆய்வு நிலையத்தில் ஏவப்பட்டது.

1976 - சீனாவில் மிக மோசமாக நில நடுக்கம் ஏற்பட்டது. தொழில் நகரான டாங்ஷான் நகர் தரைமட்டமாகியது. சுமார் 65,0000பேர் பலியாகினர் . ஏறக்குறைய 7,00000 மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

1982 - 1977 செப்ரெம்பர் மாதத்தில் ஏவப்பட்ட சல்யூட் -6 என்ற விண்வெளி ஆய்வு நிலையம் பூமிக்குத் திரும்பியது.

1984 - இலங்கைத் தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்கு மாறு பிரிட்டனில் தொழில்கட்சி உறுப்பினர்கள் 60 பேர் கோரிக்கை விடுத்தனர்.

1993 - சமயங்கள் தொடர்பான உலக நாடாளுமன்றக் கூட்டம் சிக்காக்கோ நகரில் ஆரம்பமாகியது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற*
*குலம்பற்றி வாழ்தும்என் பார்*

*-திருக்குறள்*

# நமது நோக்கு

## வவுனியா மாநாடு உணர்த்தும் செய்தி!

அரசின் பொறுப்பற்றதும், பல்வேறு அரசியல் மற்றும் இராணுவ உள் நோக்கங்களைக் கொண்டதும், பேரினவாதச் சிந்தனையுடன் கூடியதுமான நடவடிக்கைகளாலும், தமிழ் மக்களை சமாதானத்தின் பேரால், வெறுமனே வாக்குறுதிகளை மட்டும் அளித்தபடி, ஏமாற்றி, காலங்கடத்தி, ஏமாளிகளாக்கும் மூலோபாயங்களுடன் கூடிய திட்டங்களாலும் அமைதி முறையில் - பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவுகாண முடியும் என்ற நம்பிக்கையும், அதற்கான கடைசி வாய்ப்பும்கூட கைநழுவிப் போய்க்கொண்டிருக்கும் சூழலில் - தமிழ்மக்களின் அபிலாஷைகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தி அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் அறிவுறுத்தும் நோக்கில் நேற்றைய தினம் வவுனியாவில் பாரியளவிலான பேராளர் மாநாடு ஒன்று நடைபெற்றுள்ளது.

தமிழ்மக்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தும் நோக்கில் கடந்த பல வருடங்களாக நடத்திவரும் அமைதி வழிப்போராட்டங்கள், ஆர்ப்பாட்ட மற்றும் கண்டனப் பேரணிகள், அறிக்கை விடுப்புக்கள், மகஜர் கையளிப்புக்கள் போன்ற அனைத்தும் குளத்தில் எறிந்த கற்களாகவே அமிழ்ந்துபோய் விட்டுள்ள சூழ்நிலையில் - நேற்றைய பேராளர் மாநாடு சில அர்த்தபூர்வமான - இறுக்கமான சில பிரகடனங்களை மேற்கொள்ளவும், அதனை சர்வதேச சமூகத்தின் அவதானத்துக்குக் கொண்டுசெல்லவும் மட்டுமல்ல அரசுக்கு தமது இன்றைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உறுதிசெய்யவும் வழிவகுத்துள்ளது என்றே கூறவேண்டும்.

அரசின் மீதும், அதன் சமாதான முயற்சிகள் மீதும் மட்டுமல்ல ஒட்டுமொத்த சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளின் ஜனநாயகக் குணாம்சம் மீது, தமிழ்மக்களுக்குள்ள அவநம்பிக்கை என்பது எந்தக் காலத்திலும் மாற்றவே முடியாத ஒன்று என்பதை கடந்த பல தசாப்தகால யுத்தமும், இடையிடை அரசு போட்ட சமாதான கோஷங்களின் போலித்தனமும் நிருபித்தே வந்துள்ளது.

இப்போதும் 'சமாதானம்' என்ற பெயரில் ஒரு சூழல் நிலவினாலும்கூட, போர்க்காலத்தில் தமிழ்மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த ஆபத்துக்கள், அவலங் கள், அவமானங்கள் போன்றவற்றைவிடவும் இன்றைய அமை திச்சூழலை எதிர்கொள்வதே அச்சமூட்டும் தன்மை கொண்டதாகவுள்ளது.

இநத அரசு தமிழ்மக்களுக்கான உரிமைகளையும் தராது. அவர்களை உயிருடன் நிம்மதியாக வாழவும் விடாது என்பது மிகவும் உறுதியான நிலையில், சாத்தியமற்ற சமாதானத்துக்கான காத்திருப்பு அர்த்தமற்றது என்ற தீர்மானத்துக்கு வந்துள்ள தமிழ்மக்கள், தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான, தமது தாயக வாழ்நிலத்தை உயர்பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்கான விடுதலைப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதனைத் தவிர வேறு நம்பிக்கையூட்டும் மார்க்கம் எதுவுமே இல்லையென்ற இறுதி முடிவை சர்வதேச சமாதான அனுசரணையாளர்களுக்கும், இலங்கை அரசுக்கும் தெரிவிக்கும் அரங்காகவே இந்தப் பேராளர் மாநாடு நடந்தேறியுள்ளது.

'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல, நீங்கள் உங்கள் வடுகளுக்குச் செல்லுங்கள்' - என்ற நியாயமான, தவீர்க்கவே முடியாத, சமரசத்துக்கு இடமேயற்ற ஒரு பிரகடனத்தை பொங்குதமிழ் நிகழ்வுகளின் மூலம் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக முன்வைத்த அந்த மக்களின் குரல் அரசுக்கு ஏறவே இல்லை. சர்வதேச சமூகத்துக்கும் அந்த நியாயமான கோரிக்கைக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தர வல்லமை இல்லாமற் போய்விட்ட நிலையில் -

உங்களை எங்கள் மண்ணிலிருந்து வெளியேற்றாமல் நாங்கள சுதந்திரமாக, விடுதலை பெற்ற ஒரு இனமாக வாழவே முடியாது என்ற ஒரு புதிய எழுச்சி எழுந்துள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றேயாகும்.

1983 ஜுலையில் தமிழருக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்டபோது தமிழ்மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த மனித அவலம் உலகம் அறியாத புதிய விடயமேயல்ல.


இப்போது அதேநாளில் 23 ஆண்டுகாலம் தமிழ்மக்கள் எதிர்கொண்டு வந்துள்ள இராணுவ ரீதியிலான அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை சமாதானத்தின் பேரால்கூட மௌனமாக ஏற்றுக்கொண்டு அமைதிபேணத் தயாராக இல்லையென்ற தமது விடுதலை வேட்கையுடன்கூடிய பிரகடனத்தை வெளியிட்டதன் மூலம் 'நாமார்க்கும் குடியல்ளோம் நமனை யஞ்சோம்' என்ற தமிழ் மூதாதையரான நாவுக்கரசரின் கொள்கையை தமதாக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகியுள்ளது எனலாம்.

இப்போது தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தமிழ்த் தேசிய உணர்வெழுச்சியானது, காலத்தின் தவிர்க்கவே முடியாத ஒரு நிகழ்வேயாகும். இந்த எழுச்சி, பேரினவாத சக்திகளின் ஏமாற்று அரசியல் தந்திரோபாயங்களுக்கு இனிமேலும் தமிழ்மக்கள் ஏமாறத்தயாராக இல்லை என்ற இறுக்கமான செய்தியை ஆட்சியாளருக்கும், சமாதானத்தின் பேரால் இனிமேலும் எந்த விட்டுக்கொடுப்புக்களையும் மேற்கொண்டு ஏமாளிகளாகத் தயாரில்லை என்ற இறுதிச்செய்தியை சர்வதேச சமூகத்துக்கும் ஓங்கியொலித்து உரைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

அது மட்டுமல்ல எமது உரிமைகளுக்காக - மண்மீட்புக்காக இனிமேலும் அமைதி வழியில் காத்திருத்தல் அர்த்தமற்றதாகும். எனவே - யாசித்துப் பெறவேண்டிய பொருட்கள் அல்ல இவை. போரால் பெறவேண்டியதை போராடித்தான் பெறவேண்டுமென்ற தமது உள்ளக்கிடக்கையை - தாம் பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்ட செய்தியை தங்கள் தேசியத் தலைவருக்கும் இந்தப் பிரகடனம் மூலம் தமிழ்மக்கள் தெரிவித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

தெரிவிக்க வேண்டியவர் தெரிவித்து விட்டார்கள். தீர்மானிக்க வேண்டியவர்கள் உரிய முடிவை எடுப்பாரென்றே அவர்கள் நம்புகிறார்கள்.

# நாடும் நடப்பும்




# ஊடகவியலாளர் சிவராம் படுகொலை; சூத்திரதாரிகளை நெருங்கிவிட்டோம்!

## பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ

கொழும்பு ---

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலைக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்ட முக்கிய சந்தேகநபர்களைப் பொலிஸார் நெருங்கியுள்ளனர். தக்க ஆதாரத்துடன் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவதுடன், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ன்ாண்டோ தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் இடம்பெற்று வந்த சட்டவிரோத செயல்களுக்கு எதிராகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கைகள் குறித்தும், அதன் மூலம் தீர்வுகாணப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில், நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையிலே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பட்டார்.

இந்த அதிரடி நடவடிக்கைகள் மூலம், பொலிஸார் கைப் பற்றிய ஆயுதங்கள், தங்க ஆபரணங்கள், பணம், கையடக்கத் தொலைபேசிகள், வாகனங்கள் உட்பட பல முக்கிய பொருட்கள் பொலிஸ் தலைமையகத்தில் ஊடகவியலாளர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

பல வருடங்களாக எமது நாட்டில் சட்டவிரோத செயல்களும், குற்றச் செயல்களும் கட்டுக் கடங்காத வகையில் பெருகி வருகின்றன. இந்தச் சட்ட விரோதச் செயல்களாலும், குற்றச் செயல்களாலும் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவெடுத்துள்ளது. இதனால் இந்த சட்டவிரோத செயல்களையும், குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் முழு ஒத்துழைப்புடன் நாம் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினோம். பொலிஸ் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு குற்றச் செயல்கள் 60 சதவீதம் குறைந்துள்ளமை எமக்கே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எனது நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்ப்பட்ட பொலிஸார்-நேர்மையாகத் தமது அதிரடி நடவடிக்கையில் இறங்கிச் செயற்பட்டதால், எமக்கு வெற்றி ஏற்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பான சி.ஐ.டி பொலிஸாரும், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் நேர்மையாக எவருடைய தலையீடுகளும் இன்றி, தமது விசாரணைகளை இரவு பகலாகச் செய்து வருகின்றனர். முத்தலிப் படுகொலையில் பெரும்பான்மையினர் பணத்துக்கு அடிமைப்பட்டு, விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டுள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்ட போதிலும், சூத்திரதாரி இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒப்பந்தக்காரர் முன்வராமையால் வைத்தியசாலை கட்டப்பணி முடக்கம்

நெடுந்தீவு ---

மண்டைதீவுப் பிரதேச வைத்தியசாலைக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்குக் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும், அங்கு கட்டடம் அமைப்பதற்காக ஒப்பந்தகாரர் எவரும் முன்வராமையால் இந்தப்பணியைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த கால யுத்தத்தால் முற்றாகச் சேதமடைந்து போயுள்ள காரணத்தால் தற்போது அங்கு மீளக்குடியமரும் மக்களுக்கு மருத்துவசேவை வழங்க ஒரு மருத்துவ நிலையமும் இல்லாத நிலையில் பெருநெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்தப் பகுதியில் அமைக்கப்படவுள்ள வைத்திய சாலைக்கென ஒரு தொகுதி தளபாடங்கள் செய்யப்பட்டு, ஊர்காவற்றுறைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் பொறுப்பில் தற்போது வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## சுதந்திரமாக பயிற்சிகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு மாணவர்கள் கோரிக்கை

பருத்தித்துறை ---

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மைதானத்தில் மாணவர்கள் சுதந்திரமாக விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை மைதானத்தில் - மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளப் படையினர் நேரக்கட்டுப்பாடுகளை விதித்துள்ள நிலையில் - மைதானத்தைச் சுற்றி இராணுவ முகாம்கள் மற்றும் கைவிடப்பட்ட இராணுவக் காவலரண்களும் காணப்படுகின்றன.

அத்துடன் படையினரும் இதே மைதானத்தில் பயிற்சிகளையும், விளையாட்டு நிகழ்வுகளையும் நடத்தி வருவதால் மாணவர்களின் விளையாட்டுப் பயிற்சிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14)

## கூரைப் பகுதி சேதமடைந்த நிலையில் குமுதினி பயணிகள் படகு சேவை

நெடுந்தீவு ---

நெடுந்தீவுப் பகுதிக்கான படகு சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்குச் சொந்தமான குமுதினிப் படகின் கூடாரப் பகுதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து முறிந்துவிடும் நிலையில் உள்ளது.

தற்போது பெருமளவான பயணிகள் பிரயாணம் செய்வதால், படகின் வெளிக்கூடாரப் பகுதியில் இருந்து பயணம் செய்வதும், தமது பொதிகளை அதில்வைத்து எடுத்துச் செல்வதும் தொடர்கிறது. இந்த நிலையில் இந்தக் கூடாரப் பகுதி மேலும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போதைய கடும் காற்றுக் காலத்திலும், தொடர்ந்து வரும் மழைக்காலங்களிலும் இந்தக் கூடாரத்தின் ஊடாக நீர் உட்புகுந்து பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும். உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு, விரைந்து செயற்படுவார்களா? என மக்கள் எதிர்பார்த்துள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

## கடற்கரை வீதி புனரமைக்கப்படவில்லை

பருத்தித்துறை ---

பருத்தித்துறை கடற்கரை வீதியில் மீள்புனரமைப்புக்கென கற்கள் பறிக்கப்பட்டு, நீண்ட நாட்களாகியும் புனரமைப்புச் செய்யப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அத்தோடு வீதிக் கரையில் பறிக்கப்பட்டுள்ள கற்களால் வீதியால் பயணஞ்செய்யும் வாகனங்களும், பொது மக்களும் பெருஞ்சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தால் மோசமாகச் சேதமடைந்த இந்த வீதி-உடனடியாகத் தற்காலிகமாகப் புனரமைப்புச்செய்யப்பட்ட போதும், முழுமையாக புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## இன்று அகதிகள் தினம்... விஜேந்திரன்

# வந்தாரை வாழ வைப்பது தமிழர் பண்பாடு - இன்று வந்தோரால் வாழ்விழந்து நிற்பது தமிழர் நிலைப்பாடு



**யுத்தம் அல்லது வேறு இயற்கை அனர்த் தங்கள் காரணமாக ஒருவர் தனது வாழ்விடத்தைவிட்டு வெளியேறி, உள்நாட்டிலேயே வேறு இடத்தில் தங்கியிருக்கும் போது அல்லது நாட்டை விட்டு வெளியேறும் போது, அவர் அகதி என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றார்.**

தமிழர் தாயகப் பிரதேசங்களில் தங்குமிடங்களை அமைத்து, தாயகத்தின் பெரும் பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் ஈழத் தமிழ் மக்கள் சொந்த நிலத்திலேயே அகதி என்ற புனை பெயருடன் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். மக்களின் இயல்பு வாழ்வுக்காக அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வென வரிந்து கட்டிக் கொண்டு வந்த படையினருக்கு மக்களின் வாழ்விடங்களே காவலரண்களாயின.

யுத்தம் அல்லது வேறு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஒருவர் தனது வாழ்விடத்தைவிட்டு வெளியேறி, உள்நாட்டிலேயே வேறு இடத்தில் தங்கியிருக்கும் போது. அல்லது நாட்டை விட்டு வெளியேறும் போது, அவர் அகதி என்ற அந்தஸ்த்தைப் பெறுகின்றார். சொந்த நிலங்களிலேயே சொத்து சுகங்களை இழந்து, அகதி என்ற

**சொந்த நிலங்களிலேயே சொத்து சுகங்களை இழந்து, அகதி என்ற அடைமொழியுடன் எமது மக்கள் இன்றைக்கு 15 வருடங்களுக்கு மேலாக நாளாந்தம் பல்வேறு விதமான அவலங்களை அனுபவித்து வருகின்றனர்.**

அடைமொழியுடன் எம்மவர்கள் இன்றைக்கு 15 வருடங்களுக்கு மேலாக நாளாந்தம் பல் வேறுவிதமான அவலங்களை அனுபவித்து வருகின்றனர்.

உலகின் பதினொரு நாடுகளில் 1982 ஆம் ஆண்டு சுமார் 1.2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தவர்களாக இருந்தனர். ஆயுத கலாசார முரண்பாடுகளும், ஆதிக்க சமய நெறிகளாலும் 2002 ஆம் ஆண்டு சுமார் 25 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இலங்கை இராணுவத்தின் ஆதிக்க வெறியால் கடந்த 25 வருடங்களில் 8 லட்சம் மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தவர்களாயினர். இவர்களில் 5 லட்சத்து 40 ஆயிரம் பேர் இன்னும் மீள்குடியமர்த்தப்பட்டோ அல்லது சொந்த இடங்களுக்குச் செல்லவோ இல்லை. இதன் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே பெரும்பாலானநலன் புரிநிலையங்கள் இயங்கி வருகின்றன.

வடக்கு - கிழக்கு மக்கள் பல இழப்புகளைச் சந்தித்து இன்னல்களுக்கு மத்தியில் தம் சொந்த இடங்களில் இருந்து வெளியேறி, நண்பர்கள் உறவினர்களது வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர்இருந்தபோதிலும்.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த அனைவரும் தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கைக்கு உரிமையுடைவர்களாவர். உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் - எத்தகைய சந்தர்ப்பமென்பதைப் பொருட்படுத்தாமலும், பாகுபாடு காட்டாமலும் குறைந்த பட்சமாக பின்வருவனவேனும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

அத்தியாவசிய உணவும், குடிக்கத்தக்க நீரும்.

அடிப்படையான உறைவிடமும், குடிமனையும்.

தகுந்த ஆடை அணிகள்.

அத்தியாவசிய வைத்திய சேவைகளும், சுகாதார வசதிகளும்.

இவ்வாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் தனது குறிப்பேட்டின் 18 ஆவது விதியினூடாக வலியுறுத்தி நிற்கிறது.

ஜூலை மாதத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பல பரிமாண வெற்றிகளைத் தேடித் தந்தது. வரலாற்றுத் திருப்புமுனையான சம்பவங்களில் பங்கு கொண்ட பெருமை இந்த மாதத்தையேசாரும். ஆனால் இதே ஜூலை மாதத்திலேயே இன வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளும், கொள்ளைகளும் இடம் பெற்றன. தமிழர்கள் வாழ்விடங்களில் இருந்து விரட்டப்பட்டு, அவர்களது சொத்துகள், சொந்தங்கள் அழிக்கப்பட்டன.



இவ்வாறு அன்று இட்ட பேரினவாதத் தீ - பல வடிவங்களில் ஆக்கிரமித்துச் சொந்த நிலங்களிலேயே தமிழர்கள் அகதிகளாக வாழ வழிவகுத்து வருகிறது.

இந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதியைத் தான் (28-07-1951) ஆம் ஆண்டு அகதிகள் தினமாகவும், பிரகடனப்படுத்தியுள்ளனர். ஜூலை மாதத்தில் இடம் பெற்ற ஆக்கிரமிப்பு, அடாவடித்தனங்களையும் இந்தத் தினத்தையும் நோக்கும் போது ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்ட தன்மையை உணரமுடிகிறது.

தமது சொந்த இடங்களுக்குத் தாம் திரும்பலாம் என்ற முனைப்பில் இடம் பெயர்ந்த மக்கள் தமது இயல்பு வாழ்வை வலியுறுத்தியும், ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். தொடர்ந்தும் நடத்தவுள்ளனர். ஆனால் அது இன்று வரை முடியவில்லை. நீதிமன்றத்தில் வழக்குப் போட்டனர். உண்ணாவிர தப் போராட்டத்தையும் நடத்தினர். ஆனால் இன்று வரை சாதகமான பதில் எதையும் எட்டமுடியவில்லை.

தீவகத்தில் சில இடங்கள் - வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ். நகரப் பகுதி எனப் பல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் கூறும் ஒரே ஒரு காரணம் பாதுகாப்பு வலயம். இந்தப் பாதுகாப்பு வயலத்திலேயே பல பயனுள்ள பயன்தரும் வளங்கள் முடங்கிப் போயுள்ளன. இதற்கு மாற்றீடாக இவர்களுக்கான உதவிகளையோ, நிவாரணங்களையோ வழங்கவில்லை.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தம் குடிமனைகளுக்கு அல்லது வழமையான இருப்பிடங்களுக்குத் தாமாக பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் திரும்பிச் செல்வதற்கு அல்லது நாட்டின் மற்றொரு பகுதியில் தாமாகக் குடியேறுவதற்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்குவதுடன், அதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்துவது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பிரதான கடமையும், பொறுப்புமாகும். இத்தகைய அதிகாரிகள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் தம் முன்னைய இடங்களுக்குத் திரும்பிச் சென்று, மீளவும் குடியேறுவதற்கு அல்லது இணைந்து கொள்ள வாய்பளிக்கவேண்டும்.

உள்நாட்டில் இடம் பெயர்ந்து மீண்டும் தம் இடங்களுக்குத் திரும்பிய அல்லது மீள் குடியேறிய மக்கள் தாம் விட்டுச் சென்று அல்லது இடப் பெயர்வின் போது இழந்த சொத்துகளையும், உடமைகளையும் மீளப்பெறுவதற்கு முடிந்தவரை உதவும் கடமையும், பொறுப்பும் தகுதிவாய்ந்த அதிகாரிகளைச் சார்ந்ததாகும். அத்தகைய சொத்துகளையும், உடமைகளையும் மீட்டுக்கொள்வது சாத்தியமில்லாத போது, தகுந்த நட்டஈடு, இழப்பீடு வழங்க அதிகாரிகள் முன்வர வேண்டும்.

மேற் குறிப்பிட்ட குறிப்புகள் அகதிகள் தொடர்பான கைநூலின் (28-01, 29-02 விதிகளிலுள்ளவையாகும்.)

இராணுவத்தினர் இருக்கும் வரை அகதிகள் என்ற நிலை இருக்கும். போராட்டங்களும், எதிர்ப்புகளும் எதுவித பயனுமற்றது. தமிழர்கள் தம் தாயக பூமியில் தமக்கான ஒரே தலைமைத்துவத்தின் கீழ்வாழும் போதே அகதி என்ற நிலை அகற்றப்படும்.

எப்பொழுது சொந்த நிலத்தில் சுதந்திரமாக வாழ்கிறோமோ அன்றே சொந்த நிலங்களிலேயே அகதி என்ற நிலையும் அகலும்.

வந்தோரை வாழவைப்பது தமிழர் பண்பாடு - ஆனால் ..... ஆக்கிரமிக்க வந்தோரால் வாழ் விழந்து நிற்பது எந்த வகையில் நியாயம்?

---

## அரசியல்... பகுதி II

# சுதந்திரத்துக்குப் பின் இருப்பிழந்த ஈழத் தமிழர்களின் வரலாறுகள்



*நேற்றைய தொடர்ச்சி...*

இதன் பின் சமாதான நகர்வுகளைப் பொறுக்காத அரசு - தனது ஜனாதிபதி அதிகாரத்தையும், ஜே.வி.பியினது அழுத்தத்தையும் பயன்படுத்தி ரணில் அரசாங்கத்திடம் இருந்த மூன்று அமைச்சுகளையும் கைப்பற்றி, ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்த்தது. இதன் பின் ஏற்பட்ட பல சர்வதேச அழுத்தங்களாலும், ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்பதற்காகவும் சுனாமி அனர்த்த பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டது.

தற்போதைய அரசு இனி என்ன செய்யப் போகிறது? எப்படிப்பட்ட அரசியல் பிரதிவிம்பங்கள் உருவாகப் போகிறது என்பது ஒரு புறமிருக்க, சில முக்கிய வரலாற்று இடையம்சங்கள் பற்றி நோக்குவோம் -

### போராட்ட ஆரம்பத்துக்கான அடிப்படைகள்

இழந்த எமது தாயகத்தைப் போராடி மீட்பதுதான் வழி என்கின்ற இந்த முடிவு, திடீரென எடுக்கப்பட்ட முடிவோ, பின்பு பொய்ப்பிக்கக் கூடிய முடிவோ அல்ல. கசப்பான அனுபவங்கள், பாரிய இழப்புகள், தொடர்ச்சியான ஏமாற்றங்கள், அரச பயங்கரவாதப் போக்குகள் போன்றவற்றால் எடுக்கப்பட்ட முடிவுதான் இது. அந்த வகையில் இந்தப் போராட்ட ஆரம்பத்துக்கு அடிப்படையாக இருந்த தமிழ் மாணவர்களின் கல்வித் தடைகள் பற்றி நோக்குவோம்.

### கல்வியில் ஒடுக்கு முறைகள்

1960 ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்த பாடசாலைகள் பெரும்பாலும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ அமைப்புகளின் மேற்பார்வையிலே தான் இயங்கி வந்தது. 1960 இலும் 1961 இலும் பெரும் பாலான பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாடவிதானங்கள் உட்பட, பாடசாலை நிர்வாகம், ஆசிரிய நியமனம், பாடசாலை நூலக நிர்வாகம் போன்ற எல்லாவற்றிலுமே அரசியல் இடம் பிடித் துக் கொண்டது. இதனால் தமிழ் மாணவர்களது கல்வி பெரும் இக்கட்டுக்குள் தள்ளப்பட்டது. இது தவிர, முக்கியமாக ஒரு விடயம் இங்கு நோக்க வேண்டியுள்ளது.

அது யாதெனில், சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரச பதவிகளில் தொழில் பெறும் நாட்டம் கொண்ட தமிழ் மக்கள் தம் பிள்ளைகளைச் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் சேர்க்க ஆரம்பித்தனர். இதனால் ஏற்கனவே சிங்களவர்களான தமிழர்களைவிட, இவர்களும் சிங்களவர்களாயினர். பின்பு திருமணம், வாழ்க்கை முறைகள் என கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்கள் சிங்கள மக்களாக வாழ ஆரம்பித்தனர். இது தமிழ் மக்களுக்கு பெரும் சவாலாக அமைந்தது.

பாடப் புத்தகத்தை எழுதும் சபையில், சிங்கள - பௌத்த தேசியத்தவரே இருந்தனர். இவர்கள் பௌத்த தேசியத்தைத் தழுவியே பொதுக் கலைத்திட்ட அமைப்புகளை உருவாக்கினர்.

இதனைவிட 1970 ஆம் ஆண்டுகளில் சிறீமா அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட பல்கலைக் கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தல் - தமிழ் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தின் இறுதி இலக்குக்குப் பெரும் சவாலாக அமைந்தது.

**வெண்கட்டியான்**

# வவுனியாவில் நேற்று நடைபெற்ற பேராளர் மாநாட்டிலிருந்து...











# தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள படையினர்...

இருந்து வந்துள்ளோம். 1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையை புகுத்திய போது, தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்ததையும், அதன் பின் 1948 இல் இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது தமிழ் பேசும் மக்களின் இறைமையை, எண்ணிக்கையில் பெரும் பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

இவ்வாறு சிங்களச் சமூகம் முறையற்ற வகையில் பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம் - நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரீகமான முறையில் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் மொழியுரிமையும், வேலைவாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டது. கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வியுரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது.

எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்கு உட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாறாக தமிழ் பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி இலங்கைத் தீவின் அரசியல் யாப்புக்களுமே இனவாத ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் யாப்பில் சிறுபான்மை மக்களை பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29 ஆவது பிரிவு, பின்னர் 72 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிலங்கா சோஷலிச ஜனநாயகக் குடியரசு யாப்பின் மூலம் நீக்கப்பட்டது. இந்த யாப்பில் பௌத்த மதம் அரசாங்க மதமாக்கப்பட்டு இன ஒடுக்குமுறைக்கான யாப்பு வடிவமாக்கப்பட்டது.

78 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது. எனவே, நீதி வழங்கப்பட வேண்டிய அரசியல் யாப்பு அநீதியின் உறைவிடமானது.

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ்பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட நாகரீகமான அரசியல் வழிமுறைகளையும், மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்டது. அவற்றினைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும் பின் அவற்றினைக் கிழித்தெறிவதையும் வழக்கமாகக்கொண்டிருந்தார்கள்.

1957 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்குச் சான்றாக வைக்கின்றோம். இவ்வாறாக மென்முறைப்போராட்ட வடிவங்களைக் கைக்கொண்ட பொழுது எம்மக்கள் மீது மிக மோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்த நிலையில் 70 களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ் மக்களின் தற்காப்புக்கும், விடுதலைக்குமான போராட்டத்துக்கு தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

எனவே, அமைதிவழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தலைமைகள், 1976ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டனர். பின்னர் அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் - தமிழ் மண்ணையும், தமிழ்பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும், ஒரு மரபுவழிப் போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன்மூலம் இலங்கைத்தீவில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ்மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம்.

இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போதும், தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும், இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள் ஆகியன பாடசாலைகளிலும், மக்கள் குடியிருப்புகளிலும், வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு, எமது மக்கள் - பச்சிளம் பாலகர் முதல் முதியோர் வரை கோரமாகப் பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணிலிருந்து தமிழ்மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு, ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர். இத்தகைய அரச பயங்கரவாதக் கொடூரங்களையெல்லாம் அரசு என்ற முகத்திரை கொண்டு சர்வதேச சமூகத்திற்கு முன் சிங்கள பௌத்த பேரினவாதம் மூடி மறைத்தது. ஆயினும், எமது விடுதலைப்போராட்டம் ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகளைக் குவித்தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ்மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்து தேசிய விடுதலைப்போருக்குத் தோள்கொடுத்தனர்.

இந்த வரலாற்றுப்போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ்பேசும் மக்களுக்கென்றொரு நடைமுறை, அரசுக்கான கட்டுமானங்கள் நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தால் வெல்லமுடியாது என்பதை அரசு உணர்ந்துகொண்டது. சம காலத்தில் சர்வதேச சமூகம் இந்த இன முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்து கொண்டது.

வேறுவழியின்றியும், சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் - தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002 ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களும் கையொப்பமிட்டு ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சுக்களின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால், நேரடிப் பேச்சுக்கள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு முன்வைக்கப்பட்டது. இதுபற்றியும் தொடர்ந்து பேச அரசு முன்வராததால் பேச்சு வார்த்தை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப்போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம்நிறைந்த எமது சொந்த நிலங்களும், செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உலகை உலுக்கிய சுனாமிப் பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை என்பதை, சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்து. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப்போயிருக்கும் நெஞ்சுகளை மாற்ற முடியாது என்பதனை உலகம் கண்டு கொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டுப் பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகார[illegible]க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப் பெருக்க நடவடிக்கைகளையும், பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள்.

இவையாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் [illegible]ாடு இலங்கைத் தீவில் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

இந்த நிலையில், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்க மாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம். இந்த உண்மைகளை சர்வதேச சமூகமும் யுத்த நிறுத்த உடன் படிக்கைக் கால நடவடிக்கையின் மூலம் புரிந்துகொண்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டியவர்களாக சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகிறோம். எனவே, எமது தாயகப் நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் - எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும்,

எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும் என்றும்,

அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம் என்பதையும், இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதே வேளை,

தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழித் தாயகம் தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும், எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தற்கொலைதாரிகள் மூவர் கொழும்புக்குள் ஊடுருவல்

## புலனாய்வுத் துறை தகவல்

கொழும்பு —

இராணுவ அதிகாரி அல்லது புலனாய்வுப் பிரிவு அதிகாரியை இலக்கு வைத்து 3 தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகவும் -

இவர்கள் மூவரும் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வந்திருப்பதாக்வும் - புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றிய அறிக்கை பொலிஸ் மா அதிபருக்கு கையளிக்கப்பட்டதாகவும், இந்த மூவர் குறித்தும் விழிப்புடன் இருக்குமாறு கொழும்பிலும், கொழும்பை அண்டிய பிரதேசங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கொழும்புக்கு வந்துள்ள இந்த மூவரில் ஒருவருக்கு அவரின் இலக்கை அடைவதற்காக மோட்டார் சைக்கிளொன்று வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு பொருத்தப்பட்ட இந்த மோட்டார் சைக்கிளில் சென்று பாதுகாப்பு அதிகாரி பயணிக்கும் வாகனத்துடன் மோதுவதே இவரின் திட்டமாகும்.

இந்தத் தற்கொலைதாரிக்கு உதவுவதற்கே ஏனைய இருவரும் வந்துள்ளனர். பாதுகாப்புப் படை அதிகாரிகள் குறித்து தகவலறிவது இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பு என்றும் புலனாய்வுத் துறைக்கு தெரியவந்துள்ளது.

இராணுவத்தினர் பரப்பியுள்ள இந்தப் பரப்புரை உத்தியோகபூர்வமானதாக இருப்பினும், இத்தகைய உறுதியான தகவலை - அதுவும் மோட்டார் சைக்கிள் போன்றவை குறித்து அனைத்துத் தகவலையும் பெற்றுள்ள புலனாய்வுத்துறை ஏன் தற்கொலைதாரியை கைது செய்யாமல் இருக்கிறது என்பதே கேள்விக்குறியாகவுள்ளதெனவும் - இது மக்களை வழமை போல் பீதியி லும், அச்சத்திலும் இருக்கச் செய்வதற்கான நடவடிக்கைதான் எனவும் பொலிஸாரில் ஒரு பிரிவினர் விசனமடைந்துள்ளனர்.

# சமர்ப்பிக்கப்பட்ட...

கிளிநொச்சி மாவட்டம், வெகுஜன அமைப்பின் உப தலைவர், அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர்.

- ✷ தாயகப் பகுதிகளில் பேரினவாதிகளின் திட்டமிட்ட பெருளாதாரச் சீர்குலைப்பு : செல்வி வெ.ஜெயகலா, உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், யாழ். மாவட்டப் பெண்கள் மேம்பாட்டுக்குழு.
- ✷ தாயகப் பகுதிகளில் கடற்கோள் அழிவுகளும், அரசின் பாராமுகமும் : இ.செல்வநாயகம், தேசிய எழுச்சிப் பேரவை உப செயலாளர், முல்லைத்தீவு.
- ✷ சிறிலங்கா அரசினால் கிறிஸ்தவ மதப் புறக்கணிப்பு : ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகள், மன்னார் மறை மாவட்டம்.
- ✷ முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் மீதான பேரினவாத அரசின் அடக்குமுறை : மௌலவி எஸ்.எம்.சகீர், முஸ்லிம்களுக்கான பணிமனை இயக்குநர், யாழ். மாவட்டம்.
- ✷ சிறிலங்கா அரசினால் இந்துமதப் புறக்கணிப்பு : திருமதி கண்மணி இரத்தினவடிவேல், பெண்கள் மேம்பாட்டு நிறுவனம், திருகோணமலை.
- ✷ தமிழ்ப் பெண்கள், குழந்தைகள் மீதான சிறிலங்கா பேரினவாதத்தின் தாக்கம் : திருமதி பத்மினி சிதம்பரநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்டம்.
- ✷ ஈழத் தமிழர் அரசியல் வரலாறு : மு.திருநாவுக்கரசு, அரசியல் ஆய் வாளர், தமிழீழம்.

# யுத்தமொன்று மீண்டும் திணிக்கப்பட்டால் நாடு முழுவதையும் அது அதிரச் செய்யும்!

## பெ.சந்திரசேகரன் தெரிவிப்பு

வவுனியா —

இன்னுமோர் யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அது இந்த நாடு முழுவதையும் அதிரச்செய்யும் என மலையக மக்கள் முன்னணி யின் தலைவர் பெ.சந்திரசேகரன் எச்சரிக்கை செய்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

'தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே! எடுத்த முயற்சியைத் தொடருங்கள். உங்கள் பின்னால் இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழர்களும் நிற்கிறோம்'.

தேசியத் தலைவர் பிரபாகரன் மூன்று நிமிடங்கள் கூட போராட்டத்தில் ஓய்வு எடுத்ததில்லை. ஆனால், மூன்றரை வருட கால போர் நிறுத்த அமைதியை அவர் கடைப்பிடித்திருக்கிறார். அரசையோ சிங்களப் பேரினவாதிகளையோ நம்பி அவர் அமைதியைக் கடைப்பிடிக்கவில்லை. சர்வதேச சமூகத்துக்கு சிங்களப் பேரினவாதத்தை தோலுரித்துக் காட்டுவதற்காகவே அவர் அமைதி காத்தார்.

ஆனால், சமாதானம் என்கின்ற



சவப்பெட்டிக்கு கடைசி ஆணி இப்போது அறையப்பட்டுள்ளது. சிங்கள அரசுக்கு கொடுக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் முடிவடையப் போகிறது. சர்வதேச சமூகம் இப்போது உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ்மக்கள் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்னுமொரு யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அது இந்த நாடு முழுவதையும் அதிரச்செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு டாம் வீதியில் நேற்று முன்தினம் இரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - சித்தாண்டியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கிருபா (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு டாம் வீதி - ஹிசைனியா ஒழு ங்கையிலுள்ள விடுதியில் இவர் தங்கியிருந்தவேளை - நேற்று முன் தினமிரவு 12.45 மணியளவில் இனந்தெரியாத இருவர் குறித்த விடுதிக்கு சென்று இவர் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கிருபா கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு புதூர் பகுதியில் நேற்று முன்தினமிரவு ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினரான மேகன் எனப்படும் பங்கிராசா - ரமேஸ் (வயது 27) என்பவரே இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

குறித்த நபர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது, இவருக்கு பின்னாலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தமது ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் அதிகாரி டங்கன் போல் தெரிவித்தார்.

இவரது சடலம் திமிலைத் தீவிலுள்ள அவரது வீட்டுக்கு அருகிலிருந்து பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

# காத்தான்குடி முஸ்லிம் வர்த்தகர் நேற்றிரவு சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு காத்தான் குடியில் வர்த்தகரொருவர் நேற்றிரவு 9.55 மணியளவில் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். மொகிதீன் எம்.எம்.இப்ராகீம் (வயது 55) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வழமைபோல் தனது சப்பாத்துக் கடையை மூடிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருக்கையில், வீட்டில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் மறைந்திருந்த ஆயுத பாணிகள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் இயங்கும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தையுடைய முஸ்லிம் ஆயுதக்குழு ஒன்றே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதென பொலிஸார் நம்புகின்றனர்.

கடந்த திங்கள் அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன் ஆகிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கந்தூரி (அன்னதானம்) அந்த அமைப்பின் தலைமைக் காரியாலத்தில் நடைபெற்றது.

இந்த அமைப்பின் கோட்பாட்டை பின்பற்றும் பிரிவினருக்கு எதிராக ஏற்கனவே காத்தான்குடியில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த கந்தூரிக்கு எதிராகவும், குறிப்பிட்ட பிரிவினருடன் தொடர்புவைப்போருக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் - ஈமானின் நெஞ்சங்கள் என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டது. இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

கொல்லப்பட்டவர் இந்த கந்தூரி தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களில் தொடர்புடைய ஒருவரானவர் என்றும், இதன் காரணமாகவே இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (01)

# உணர்வுபூர்வமாக நடந்தேறிய....

அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனிய வன், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சய், மன்னார் மாவட்ட ஆயர் ராயப்பு யோசப் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டை அரங்க செயற்பாட்டுக் குழு உறுப் பினர் எம்.விந்தன் ஆரம்பித்து வைக்க, திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் தலைமை தாங்கி நடத்தினார்.

இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை கரும்புலி லெப். கேணல் போர்க்கின் தாயார் திருமதி மாப்பாணபிள்ளை ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் லெப். கேணல் விக்ரரின் தந்தையார் ச.மருசலீன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை தமிழீழத்தின் அனைத்துப் பிரதேசப் பிரதிநிதிகளும் ஏற்றினர்.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து -

தமிழ் மக்களின் கல்விப் புறக்கணிப்புத் தொடர்பான ஆய்வுக் கட்டுரையை முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் நந்தகுமார் சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் களான செல்வம் அடைக்கலநாதன், இரா.சம்பந்தன், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேக ரன் உட்பட பலர் உரையாற்றினர்.

நிகழ்வின் நிறைவில் பேராளர் மாநாட்டு பிரகடனத்தை யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் க.சிதம்பரநாதன் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து நன்றியுரையினை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எஸ்.விமலா நிகழ்த்தியதுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இதேவேளை - நேற்று வெளியிடப்பட்ட பிரகடனத்தை தமிழீழத் தேசியத் தலைவரிடம் ஒப்படைக்கும் வகையில் இன்று கிளிநொச்சி யில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் வைத்து நிகழ்வின் ஏற்பாட் டாளர்களால் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனிடம் கையளிக்கப்படவுள்ளது. (03)

# மேர்வின் சில்வாவின் செயலைக் கண்டித்து கொழும்பில் ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு —

ஊடகவியலாளர்களையும், ஊடக நிறுவனங்களையும் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தகாத வார்த்தையால் தூற்றியதையும், அச்சுறுத்தியதையும் கண்டித்து நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலயத்திற்கு முன்பாக ஊடகவியலாளர்களால் நடத்தப்பட்டது. இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சுதந்திர ஊடக இயக்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் மீடியாபோரம் ஆகியவற்றின் பல ஊடகவியலாளர் கலந்து கொண்டனர்.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணிநேரம் வரை இடம் பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை கண்டிக்கும் பதாகைகளையும், மேர்வின் சில்வா மன்னிப்புக் கோரவேண்டும் என்ற கோசங்களையும் எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில் -

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தனது பதவியிலிருந்து இராஜி னாமா செய்ய வேண்டும். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் வரை எதிர்ப்பு போராட்டம் தொடரும்.

எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற இடமளிக்கும் வகை யில் அவர்களை அச்சுறுத்தவோ, தூசிக்கவோ கூடாதெனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே! நாடுங்கள்...

- ➤ பாடசாலை, பல்கலைக்கழகப்பாடப் புத்தகங்கள்
- ➤ அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள்
- ➤ ஆய்வுகூட உபகரணங்கள்
- ➤ பாடசாலை உபகரணங்கள்
- ➤ நுணுக்குக்காட்டிகள்
- ➤ அழிபொருள்கள் ....
- ➤ தர உள்ளீட்டுப் பொருள்கள், மூலதனப் பொருள்கள்
- ➤ விளையாட்டுப் பொருள்கள்
- ➤ O.H.P புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்
- ➤ வாத்தியக்கருவிகள்
- ➤ கணனி நூல்கள்

யாவற்றையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021222 2938



[C/4317]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.